வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

28.01.2021 வியாழக்கிழமை







06 யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்



07 யாழ்ப்பாணத்தில் நெடுந்தூர பஸ் நிலையம் திறப்பு



09 யார் இந்த சசிகலா?



12 தனிமைப்படுத்தல் விதிகளுக்கு ஆதரவு

# மணியின் பட்ஜெட் வெற்றி!

## ஆதரவு 26 எதிர்ப்பு 03 நடுநிலை 15

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான புதிய வரவு - செலவுத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 26 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன் 15 பேர் நடுநிலை வகித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயராகப் பதவி வகித்த இ.ஆனல்ட் சமர்ப்பித்த 2021ஆம் 02

# குற்றம் புரிந்த இராணுவத்தினர் மீது சர்வதேசக் குற்றவியல் விசாரணை!

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெளிவாக வலியுறுத்தல்



ஜெனிவா, ஜனவரி 28

இலங்கையின் தமிழ்ப் பிரிவினைவாத மோதல்கள் மற்றும் போர்க் குற்றங்களில் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றம்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையார் வலியுறுத்தியுள்ளார். 02

## 440 பேர் சாட்சியம் ஈஸ்டர் தாக்குதல் விசாரணை நிறைவு

கொழும்பு, ஜன.28

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் 02

## கொரோனாவால் மேலும் இருவர் உயிரிழப்பு

### பலி எண்ணிக்கை 290 ஆக உயர்வு

கொழும்பு, ஜன. 28

கொரோனா வைரஸ் தொற்றால் நாட்டில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர். 02

## ஜனாதிபதி, பிரதமருக்கு முதற்கட்டத்தில் தடுப்பூசி

கொழும்பு, ஜன. 28

இந்தியாவில் இருந்து இன்று இலங்கைக்கு கொண்டு வரப்படும் கொரோனா தடுப்பூசி முதல் கட்டமாக ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கும், கொவிட்டுக்கு எதிராக போராடி வரும் சுகாதாரப் 02

## சிகிரியாவுக்கு சென்ற 23 பேருக்கு தொற்று!

கொழும்பு, ஜன.28

மத்துகமை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் பொன்துபிட்டி பிரதேசத்திலிருந்து சிலர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் சிகிரியாவுக்கு சுற்றுலாப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள நிலையில் அவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் சுற்றுலா 02

## ஐ.தே.க. சிரேஷ்ட துணைத்தலைவர் பதவியை ஏற்க அர்ஜுன மறுப்பு



கொழும்பு, ஜன.28

முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளார்.

நாட்டை முன்நோக்கி கொண்டு செல்வதற்கான முன்மொழிவை உருவாக்க கட்சி தவறிவிட்டது எனக் குறிப்பிட்டு அர் 02

## நேற்று ஒரேநாளில் மட்டும் 1,520 பேர் கொரோனாவிலிருந்து குணமடைவு

கொழும்பு, ஜன.28

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நேற்று 1,520 பேர் குணமடைந்தனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவே நாளொன்றுக்கு பதிவாகிய அதிகபட்ச எண்ணிக்கை என்று அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 52 ஆயிரத்து 566 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் 02

## அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தனிமைப்படுத்தப்பட்டார்




கொழும்பு, ஜன.28

வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க நேற்று புதன் கிழமை முதல் அவரின் வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவுக்கு கொரோனா தொற்று 02

## 60 ஆயிரம் பேருக்கு மேல் கொரோனா தொற்று உறுதி



கொழும்பு, ஜன.28

இலங்கையில் இதுவரை 60 ஆயிரம் பேருக்கு மேல் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் நேற்று இரவு 7 மணி வரையான காலப்பகுதியில் 311 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது என சுகாதார 02

## மணியின் பட்ஜெட்...

ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அவர் பதவி இழந்தார்.

அதன் பின்னர் நடைபெற்ற மேயர் தெரிவில் இ.ஆனல்ட் மற்றும் வி.மணி வண்ணன் ஆகியோர் போட்டியிட் டனர். அதில் வி.மணிவண்ணன் மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதையடுத்து அவரால் நேற்று புதிய வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டது.

45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று மாலை இடம்பெற்ற வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப் பினர்கள் நடுநிலை வகித்தனர். முன்னாள் மேயர் இ.ஆனல்ட் நேற்று சபைக்கு வர வில்லை.

அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்கள் எதிராக வும், அக்கட்சியின் 10 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர்.

ஈ.பி.டி.பி. உள்ளிட்ட ஏனைய கட்சி களின் உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதன்படி 23 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப் பட்டது.

## அமைச்சர்...

உறுதியானதை அடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய நிலையில் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தனிமைப்படுத்தப்பட் டுள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனை யின்பேரில் கடந்த 24 ஆம் திகதி இந்த இருவரும் வலப்பனையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தனர். இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள் ளது.

இதுவரை பாராளுமன்றில் அமைச் சர், இராஜாங்க அமைச்சர் உட்பட 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி யாகியுள்ளது. (அ-எ)

## குற்றம் புரிந்த...

ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்க வுள்ளார்.

சுமார் 37 வருடங்களாக நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப் பட்ட பல்லாயிரக்கணக்கான பொது மக்களுக்கான நீதியை உறுதி செய்வதற் குத் தவறியுள்ளமை தொடர்பில் அவர் இலங்கை மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பொறுப்புக்கூற லையும் நல்லிணக்கத்தையும் உறுதி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட உள்ளகப் பொறிமுறைகள் அவற்றுக்கான சிறந்த தீர்வைப் பெற்றுத்தருவதற்குத் தொடர்ந்தும் தவறியிருப்பதுடன், தண் டனைகளிலிருந்து தப்பிப்பதற்கான வாய்ப்புக்களை மேலும் அதிகரித்திருக் கிறது என்றும் மிச்செல் பச்சலெட் சுட் டிக்காட்டியிருக்கிறார் என சர்வதேச ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் மனித உரிமைகளைப் பாது காப்பதற்காக முன்னைய நிர்வாகங்களி னால் மேற்கொள்ளப்பட்ட சில முன் னேற்றகரமான நடவடிக்கைகளையும் தற்போதைய கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது என்றும் ஆணையாளரின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், விமர்சகர்கள் மீதான கண்காணிப்புக் களும் சுயதணிக்கைக்கான அவசியமும் அதிகரித்திருப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைப் படைகள் மருத்துவமனைகளின் மீதும் வான்வழி ஊடாக கண்மூடித்தனமாகக் குண்டுவீச் சுக்களை நடத்தியதாகவும் சரணடைந்த வர்களைப் படுகொலை செய்ததாகவும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாம லாக்கப்பட்டதாகவும், இலங்கை விவ காரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள் ளப்படவேண்டும் என்று முதற்தடவை யாகப் பரிந்துரைத்திருக்கும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், தமிழ்க் கிளர்ச்சியாளர்கள் உள்ளடங்கலாக போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக நட வடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-எ)

## 440 பேர் சாட்சியம்...

ஷானி அபேசேகரவிடம் நேற்று முன் தினம் வாக்குமூலம் பெறப்பட்டதை அடுத்து சாட்சி விசாரணைகள் நிறைவுக்கு வந்தன. இதனடிப்படையில் ஒரு வருட காலத்துக்குள் அதிகமாக 440 பேரிடம் சாட்சி விசாரணைகள் இடம் பெற்றிருந்தன. (அ-எ)

## சிகிரியாவுக்கு...

வில் கலந்துகொண்ட 22 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த பிரதேசத்தி லேயே மீகமை தொழில்பேட்டையில் மர உற்பத்தி நிறுவனமொன்றில் இந்தி யப் பிரஜை ஒருவர் உட்பட 75 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் அனைத்து ஊழி யர்களும் நிறுவனத்துக்குள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தொற்றாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று வெலிமடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேலும் 10 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள னர்.

இந்தத் தொற்றாளர்களுள் 3 மற்றும் 7 வயது சிறுவர்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## நேற்று ஒரேநாளில்...

மொத்த எண்ணிக்கை 59 ஆயிரத்து 922 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 7 ஆயிரத்து 68 பேர் தொடர்ந் தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 863 பேர் கொரோனா தொற்று சந்தேகத் தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ள னர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 288 பேர் உயிரி ழந்தனர். (அ-எ)

## கொரோனாவால்...

43 மற்றும் 74 வயதுகளுடைய பெண் கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ள னர். இதன்படி கொரோனா வைரஸ் தாக் கத்தால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 290 ஆக அதிகரித்துள்ளது.

## ஜனாதிபதி...

பணியாளர்களுக்கும் ஏற்றப்படவுள்ளது.

இன்று முதல் நடைமுறைப்படுத்தப் படவுள்ள கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடர்பாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், கொவிட் தடுப் பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணி யின் பிரதானியுமான லலித் வீரதுங்க தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றும் முதல் கட்ட நட வடிக்கையில் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வழங்கப்படவுள்ளது. இதில் முதல் கட்டத்தில் தடுப்பு நட வடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர் களும் உள்வாங்கப்படவுள்ளனர். 2 ஆம் கட்டத்தின் கீழ் தொற்றைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இராணும், பொலிஸாருக்கு வழங்கப்படவுள்ளது. இதில் சுமார் 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வரை தடுப்பூசியை பெற்றுக்கொள் வார்கள் என்றும் அவர் கூறினார்.



# முல்லைத்தீவு களிக்காட்டில் யானை ஒன்று உயிரிழப்பு!

முல்லைத்தீவு முள்ளியவளை களிக் காடு வனப்பகுதியில் காட்டு யானை ஒன்று உயிரிழந்த நிலையில் காணப்பட் டது.

குறித்த யானையினை வன ஜீவராசி கள் திணைக்களத்தின் அதிகாரிகள் பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# துறைமுக ஊழியர்கள் இன்று முதல் சட்டப்படி வேலைப் போராட்டம்

கொழும்பு, ஜன. 28

இலங்கை துறைமுக ஊழியர்கள் இன்று முதல் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன் னெடுத்தனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முதலீட்டு நடவடிக்கை களுக்காக இந்தியாவுக்கு கையளிப்பதற் கான கோட்டாபய அரசின் தீர்மானத் துக்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது எனக் கிழக்கு முனையத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்துக்குத் துறை முக தொழிற்சங்கங்கள் பல ஆதரவளிக் கவுள்ளன என்று கிழக்கு முனையத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு முனைய விவகாரம் தொடர் பாக அரசுடன் பல தடவைகள் கலந் துரையாடியபோதும், அரசு தமது நிலைப்பாட்டில் இருந்து மாறாமல் இருக்கும் நிலையில், அதற்கு எதிராக ஆரம்ப கட்டமாக சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவ்வாறான போராட் டம் தொடர்பாக இதுவரையில் தங் களுக்கு அறிவிக்கப்படவில்லை எனவும், துறைமுகப் பணிகள் அத்தியாவசிய சேவைகள் என்பதனால் இது தொடர் பாக விசேட அவதானம் செலுத்தப்பட் டுள்ளது எனவும் துறைமுக அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயாகமகே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் தொடர்பாக எழுந் துள்ள சர்ச்சைகள் குறித்து, நாளைமறு தினம் ஜனாதிபதிக்கும், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 60 ஆயிரம்...

அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 60 ஆயிரத்து 233 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நேற்று நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து மேலும் 1,520 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர். (அ-எ)

## ஐ.தே.க. சிரேஷ்ட...

ஜூன ரணதுங்க, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவராக தான் நிய மிக்கப்பட் டுள்ளதாகத் தகவல் கிடைத்த தாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார்.

இருப்பினும் இந்தப் பதவியை ஏற்ப தில்லை என்று தான் முடிவு செய்துள்ள தாகவும் அர்ஜூன ரணதுங்க, ரணில் விக் கிரமசிங்கவுக்கு தெரிவித்துள்ளார்.

## இலங்கை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை எவ்வித விட்டுக்கொடுப்பு களுக்கும் இடம்தராத வகையில் தமிழ் அரசியல் தரப்பு நடந்துகொள்ளும் பட்சத்தி லேயே சர்வதேச சமூகம் ஒரு நல்லமுடிவு களை எடுப்பதற்கும் அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றம் பெறும் எனக் கருதலாம்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலை மையிலான புதிய அரசாங்கம், முன் னைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத் தைவிட இலங்கை தமிழர் பிரச்னை தொடர் பாக பரிச்சயம் உடையதாகவே இருக்கின்றது.

ஏனெனில், இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் அமெ ரிக்க ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமாவின் உப ஜனாதிபதியாக இருந்த வரே இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்.

அமெரிக்க உப ஜனாதிபதியாக இருக்கின்ற கமலா ஹரிஸ் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட ஒரு நிபுணத்துவம் வாய்ந்த வழக்கறிஞராக வும் இருக்கின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில், இலங்கை குறித்த அமெரிக்காவின் ஜெனிவா மனித உரிமைப்பேரவை நிலைப்பாடு மாற்றம் ஏற்படாது இருக்கப்போவது ஒருபுறம் இருக்க, புதிய அழுத்தங்கள் இலங்கை மீது அமெரிக்காவினால் பிரயோகிக்கப் படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறதென்றே கருதலாம்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
27.01.2021 வியாழக்கிழமை
சார்வரி, தை 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் மீதான குற்றச்சாட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார். கடந்த பொதுத் தேர்தலில் சிறையில் இருந்தவாறே பிள்ளையான் வெற்றிபெற்றிருந்தார். அவரது வெற்றியைத் தொடர்ந்து அவர் விடுதலையாவதற்கான சாத்தியங்கள் இருப்பதான ஒரு பொது அவதானம் இருந்தது. இந்த நிலையில், பலரும் எதிர்பார்த்ததுபோன்று அவர் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைக்கும் கிழக்கின் கட்டளைத் தளபதியாக இருந்த கருணாவுக்கும் இடையில் ஏற்பட்ட உள் மோதல்களை தொடர்ந்து, கருணா தலைமையிலான கிழக்குப் போராளிகள் பலர் அமைப்பிலிருந்து வெளியேறியிருந்தனர். இதன்போது கருணாவோடு இணைந்து வெளியேறிய பிள்ளையான் பின்னர் ஜனநாயக அரசியலில் இணைந்து, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவுடன் கிழக்கு மாகாண முதலமைச்சரானார். உண்மையில், அன்றைய சூழலில் முஸ்லிம் ஒருவரே கிழக்கு மாகாணத்திற்கான முதலமைச்சராக வந்திருக்க வேண்டும். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ தனது அதிகாரத்தை பயன்படுத்தி முஸ்லிம் தலைமைகளை கட்டுப்படுத்தி, பிள்ளையானை முதலமைச்சராக்கியிருந்தார். பிள்ளையான் முதலமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர்தான் கிழக்கில் தமிழ் முதலமைச்சர் என்னும் எண்ணக்கரு கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்றியது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்குமிடையிலான யுத்தம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், 2005 டிசெம்பர் கிறிஸ்துமஸ் தினத்தின்போது ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைசெய்யப்பட்டார். இதனுடன் கருணா குழுவிற்கு தொடர்பிருப்பதாக குற்றம் சாட்டப்பட்ட போதும், குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லையென்னும் அடிப்படையில் விசாரணை பின்தளப்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், 2015இல் ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, முக்கிய படுகொலைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக ரணில்-மைத்திரி அரசாங்கம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்தே பரராஜசிங்கம் கொலை வழக்கின் விசாரணை துரிதப்படுத்தப்பட்டது.

தற்போது வழக்கிலிருந்து விடுதலையாகியிருக்கும் பிள்ளையான், கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்கவே தான் கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவித்திருக்கின்றார். இதில் உண்மையிருக்குமா? ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. கூட்டமைப்பு இது தொடர்பில் பேச்சுக்களையும் நடத்தியிருந்தது. ஆனால், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ரணில்-மைத்திரி அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. ஏனெனில், அந்தளவிற்கு பலமானதொரு நிலையில் கூட்டமைப்பு இருந்திருக்கவில்லை; அல்லது, கையாளக்கூடிய ஆளுமையுடன் கூட்டமைப்பு இருந்திருக்கவில்லை.

உண்மையில், இதனை வேறுவிதமாகவே பார்க்கவேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைப்பதாக வாக்குறுதியளித்திருந்த ரணில் அரசாங்கம், சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானது. ஆனாலும் படையினர் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலைமையிருந்தது. இந்த நிலையில், தெற்பகுதியில் இடம்பெற்ற சில படுகொலைகளை விசாரிப்பதற்கு முன்பதாக, வடக்கு, கிழக்கில் தமிழ் குழுக்களால் இடம்பெற்றவை எனக் கூறப்படும் சிலவற்றை விசாரணைக்குள்ளாக்க முற்பட்டது. அதேவேளை, இதன் மூலம் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்னும் தோற்றத்தையும் சர்வதேசத்திற்கும் காண்பிக்க முற்பட்டது. இதனடிப்படையிலேயே ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்குடன் தொடர்பானவர்கள் என சந்தேகப்பட்டவர்களை அரசாங்கம் கைதுசெய்தது. இந்த விசாரணைகளின் தொடர்சியாகவே பிள்ளையானின் கைது இடம்பெற்றது. ஆனால், தற்போதைய அரசாங்கமோ மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நிராகரித்திருக்கின்றது.

# இலங்கை பிரச்னையோடு பரிச்சயமான ஜனாதிபதி ஜோ பைடன்!

- அலசுவது இராஜதந்திரி -



அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலிருந்து முன்னாள் ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்காலத்தில் விலகியிருந்தது. ஆனால், அமெரிக்காவினு டைய நிலைப்பாடு இலங்கை தொடர்பாக எவ்வித மாற்றத்துக்கும் உட்படமாட்டாது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி டெப்லிக்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்துவதில் அமெரிக்கா முன்னிலையில் நின்ற ஒரு நாடாகும். அத்துடன், அமெரிக்காவின் நேசநாடுகளும் இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான காலகட்டத்தில் மனித உரிமைகள் மேம்படுத்தப்பட்டு, யுத்த குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவை விசாரணை செய்யப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தது.

**முரண்டு பிடிக்கும் இலங்கை**

ஆனால், இத்தடவை இலங்கை அரசாங்கம் ஜெனிவா மனித உரிமை பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் சம்பந்தமாக முரண்டுபிடித்துக் கொண்டிருக்கும் வேளையில், அமெரிக்காவினுடைய இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமுமில்லை என்று அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க புதிய ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் மனித உரிமைகளை பாதுகாப்பதில் தனது அக்கறையை வெளியிட்டுள்ளது.

கடந்த டொனால்ட் ட்ரம்ப் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட பல்வேறுபட்ட விடயங்களுக்கும் தற்போது மீளவும் ஜோ பைடன் நிர்வாகத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில், அமெரிக்கா தலைமையேற்று கொண்டு வந்திருந்த இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணையை அமெரிக்கா உதாசீனம் செய்யும் என்று எதிர்பார்ப்பது தவறானதாகவே இருக்கும்.

இலங்கை தென்னாசிய பிராந்தியத்தில் சீனாவை பெரிதும் நம்பியிருப்பதையும், இதன்காரணமாக சீனாவின் வல்லரசுப் போக்கு கையோங்குவதையும் ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது.

ஆசியாவில் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளாக இந்தியா, ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்றவை இருக்கின்றன. இவ்வகையில், இலங்கை தன்னிச்சையான தீர்மானங்களை ஜெனிவா மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடர் தொடர்பாக எடுப்பதை அமெரிக்காவோ அல்லது அதன் நேசநாடுகளோ ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

**இலங்கையின் சமர்ப்பணம்**

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜெனிவா மனித உரிமைப் பேரவை தொடர்பாக தமது அரசின் சார்பாக சமர்ப்பிக்கவுள்ள விடயங்கள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க முன்வந்துள்ளபோதிலும், இந்த ஆணைக்குழுவினால் எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கு முன்பதாக இலங்கையின் சமர்ப்பணத்தை மேற்கொள்ள முடியுமா என்பதுகூட சந்தேகமாகவே இருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை ஜெனிவா மனித உரிமை பேரவையிலிருந்து தப்பமுடியாத ஒரு நிலையே காணப்படுகின்றது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்சல்ட் பச்லட்டின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு பிரித்தானியா, கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளும் தமது ஆதரவை வழங்கியுள்ளன.

எனவே, அரசியல் மற்றும் இராஜதந்திர அனுபவமற்ற இன்றைய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஜெனிவா மனித உரிமைப் பேரவை சம்பந்தமாகவும், அங்கே கொண்டு வரப்படக்கூடிய இலங்கை தொடர்பான பிரேரணைகள் குறித்தும் கடுமையாக விமர சித்து வருவதன் மூலம், இலங்கை சர்வதேச ரீதியாக தனிமைப் படுத்தப்படும் சூழலே பலமடைவதாக இருக்கும்.

இதேவேளை, இன்றைய ஆட்சியாளர்கள் ஜெனிவா மனித உரிமைப்பேரவை தொடர்பாக கடும்போக்கை கொண்டிருப்பதற்கு கடந்த ஆட்சிக்காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருந்த விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் ஒரு முக்கிய காரணமாகவே இருக்கின்றது.


இவ்வகையில், சர்வதேச அமைப்புக்கள் இலங்கை தொடர்பாக எடுக்கவிருக்கின்ற நடவடிக்கைகளுக்கு வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தரப்பும் ஒரு பலமான ஒன்றிணைந்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டியதே இன்றியமையாததாகின்றது.

**தமிழ் தரப்பு**

இத்தடவை ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் இலங்கை தொடர்பான

(02ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# ஐ.நாவுக்கு மேலும் 2 கடிதங்கள் பின்னடிக்கின்றது கூட்டமைப்பு

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.28

**இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஐ.நா.மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஏற்கனவே ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ள நிலையில், மேலும் இரு கடிதங்கள் அனுப்பப்படவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

அதன்படி முதலாவது கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய இரண்டு கடிதங்களை அனுப்புவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் பின்னடிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் வைத்திருப்பதனால் எவ்விதமான பயனுமில்லை என்பதை 2012ஆம் ஆண்டிலிருந்து நாம் வலியுறுத்தி வந்ததன் பிரகாரம் அவ்விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு கூட்டமைப்பும் அதனுடன் சார்ந்த ஏனைய தரப்புக்களும் இணக்கம் கண்டுள்ளன.

அதனடிப்படையிலேயே நாம் உள்ளிட்ட மூன்று கூட்டணிக் கட்சிகளினதும் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் கையொப்பமிட்ட கடிதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், அவரின் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாடானது, இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தை செய்விப்பதற்கான வலுவான கோரிக்கையையும் அதேநேரம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிலிருந்து அவ்விடயத்தை மீளெடுத்து ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு அனுப்புவதை கொண்ட கோரிக்கையையும் உள்ளடக்கியதாகும்.

இதேநேரம், மேலும் இரண்டு கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்களை அனுப்பி வைப்பதென்றும் இணக்கம் காணப்பட்டது.

ஆனால், தற்போது அவ்விடயம் குறித்து ஏனைய தரப்புக்கள் கரிசனை கொள்வதாக இல்லை. அவ்விடயம் சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை வலிறுத்தி நான் மின்னஞ்சலை அனுப்பியுள்ளபோதும் இதுவரை அதுகுறித்து எந்த பதிலளிப்புக்களும் கிடைக்கவில்லை-என்றார்.




**மேடம்** மரியாதையும் உயரும். தொலைதூரப் பயணம் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு மாற்று இனத்தார் ஒத்துழைப்புச் செய்வர்.

**இடபம்** வெற்றிச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். தாராளமாகச் செலவிட்டு மகிழ்வீர்கள். உறவினர்கள் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுப்பர்.

**மிதுனம்** ஆதாயத்தைவிட விரயங்களே அதிகரிக்கும். எண்ணங்களை நிறைவேற்ற இல்லத்தினரின் ஒத்துழைப்பு கிடைப்பது அரிது. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**கடகம்** கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும் நாள். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு கிட்டும்.

**சிம்மம்** மனத்தளவில் நினைத்த காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். சொத்துகளில் இருந்த சிக்கல்கள் அகலும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி** தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். தொழில் முயற்சிக்கு வங்கிகளின் ஒத்துழைப்பு கிட்டும்.

**துலாம்** பணவரவு திருப்தி தரும் நாள். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வீர்கள். பொருட்களை வாங்குவதில் நாட்டம் அதிகரிக்கும்.

**விருட்சிகம்** அருகில் இருப்பவரை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவு பகையாகாமல் பார்த்துக்கொள்ளவும். திடீர் இடமாற்றம், திகைப்பை உருவாக்கலாம்.

**தனுசு** எடுத்த காரியங்களில் இனிதே வெற்றி காணும் நாள். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். வரன்கள் வாயில் தேடி வந்து சேரும்.

**மகரம்** நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நாள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். வியாபார முன்னேற்றம் ஏற்படும். வாகன யோகம் உண்டு.

**கும்பம்** இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் நாள். வியாபார நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

**மீனம்** தனவரவு தாராளமாக வந்து சேரும் நாள். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். பிரபலமானவர்கள் உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பர்.

## வங்கி ஊழியருக்கு தொற்று

கொழும்பு, ஜன. 28

ஜா- எல பகுதியிலுள்ள வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், மீள் அறிவித்தல் வழங்கப்படும் வரை அந்த வங்கி மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளருடன் தொடர்புடையவர்கள் இனங்காணப்பட்டு அவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என, ஜா- எல பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

## அடுத்த மாதம் முதல் பேக்கரி உற்பத்திகள் விலை அதிகரிக்கும்

கொழும்பு, ஜன. 28

பேக்கரி உற்பத்திகளின் விலையை அடுத்த மாதம் முதல் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி உற்பதிகளுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலையேற்றம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கம் கூறியுள்ளது.



## குருந்தூர்மலைக்கு சென்றது கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு

முல்லைத்தீவு, ஜன. 28

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுப் பணிகள் நடைபெறும் இடத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் நேற்று விஜயம் செய்து நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர்.

நேற்றுக் காலை அந்தப் பகுதிக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரை அங்கு காவல் கடமையில் நின்ற இராணுவத்தினர் உள்ளே செல்ல விடாது தடுத்ததோடு, தமது மேலதிகாரியின் உத்தரவுப்படி யாரும் உள்ளேசெல்லஅனுமதிக்கமுடியாது எனத்தெரிவித்து தடைவிதித்தனர்.

அவ்விடத்திலிருந்து தொலைபேசி வாயிலாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை அழைத்த பாராளுமன்ற உறுப்பினர்கள், விடயம் குறித்து தெரியப்படுத்தியதை தொடர்ந்து, தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகமும் தொலைபேசியூடாக சாள்ஸ் நிர்மலநாதனுடன் கலந்துரையாடியதன் பின்னர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் பங்குபற்றலுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

குருந்தூர் மலைப்பகுதிக்கு சென்றபாராளுமன்ற உறுப்பினர்களின் வாகன இலக்கங்களையும் காவல் கடமையில் இருந்த இராணுவத்தினர் பதிந்ததோடு வருகை தந்தவர்கள் தொடர்பான விவரங்களையும் பதிவு செய்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் , கரைச்சி, பச்சிளைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

## மேலும் ஒரு தொகுதியினருக்கு மன்னாரில் பி.சி.ஆர். சோதனை

மன்னார், ஜன. 28

மன்னாரில் நேற்று புதன்கிழமை காலை மேலும் ஒரு தொகுதியினருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் இணைந்து இந்த பி.சி.ஆர்.பரி சோதனைகளை மேற் கொண்டனர்.

மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் வைத்து மன்னார் மாவட்ட தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் மன்னார் பஸ் தரிப்பிட பகுதியில் சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகள் மற்றும் பொலிஸார் ஆகியோருக்கு இந்த பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளாத மன்னார் பஸ் தரிப்பிடப் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகளுக்கு இன்று வியாழக்கிழமை முதல் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படாது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறி வித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இந்த மாதம் 1 ஆம் திகதி முதல் தற்போது வரை 142 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் மொத்தமாக 159 தொற்றாளர்கள் இதுவரை அடை யாளம் காணப்பட்டுள்ளதோடு, 2 கொரோனா மரணங்களும் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு





# நல்லூர் கந்தன் ஆலயத்தின் புதிர் எடுத்தல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 28

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் புதிர் எடுக்கும் விழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

தைப்பூசத்தினத்திற்கு முதல் நாள் கொண்டாடப்படும் இப்பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது கதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலிலுள்ள வயலுக்குச் செல்வார்கள். அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லிலிருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் மரபாக, பண்பாட்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்புதிர்விழா 287 ஆவது ஆண்டாக இந்த வருடம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண சுகாதாரத்துறையில் 10,400 பேருக்குத் தடுப்பூசி தேவை

## சுகாதார அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.28

**வடக்கு மாகாணத்தில் மருத்துவர்கள், தாதியர்கள் உள்பட்ட சுகாதாரத் துறையினருக்கு வழங்க 10 ஆயிரத்து 400 பேருக்கு கொவிட் -19 தடுப்பூசி டோஸ்கள் தேவை என கோரப்பட்டுள்ளது.**



இந்த தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முதல் கட்டமாக சுகாதாரத் துறையினருக்கு கொவிட் -19 தடுப்பூசி வழங்கப்படும் என சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டது.

அவ்வாறு வடக்கு மாகாணத்தில் கொவிட் -19 தடுப்பூசி வழங்கப்படவேண்டிய சுகாதாரத் துறையினரின் விவரங்களை சுகாதார அமைச்சு கேட்டிருந்தது.

அதனடிப்படையில் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மருத்துவ சேவையாளர்கள், ஊழியர்கள் என 9 ஆயிரத்து 400 பேர் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்றனர்.

அவர்களுடன் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மருத்துவ கல்வியாளர்கள், மருத்துவப் பயிற்சியாளர்கள் என ஆயிரம் பேருக்கும் சேர்த்து 10 ஆயிரத்து 400 பேரின் விவரம் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது” என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# சம்பள முன்மொழிவுக்காக நாம் ஓரணியில் திரள்வோம்

## இ.தொ.காவுக்கு வேலுகுமார் அழைப்பு

கொழும்பு, ஜன. 28

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் தொழிற்சங்க தரப்புகளில் இருந்து இன்னும் காத்திரமானதொரு வரைவுநகல் முன்வைக்கப்படவில்லை. எனவே, அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து உறுதியானதொரு முன்மொழிவை விரைவில் முன்வைக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் அறைகூவல் விடுத்துள்ளார்.

கண்டி மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு அறைகூவல் விடுத்தார்.

இது தொடர்பில் வேலுகுமார் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் பிரச்னை என்பது உச்சகட்டத்துக்கு வந்துள்ளது. இந்நிலையில் முதலாளிமார் சம்மேளனம் உத்தேச சம்பள முன்மொழிவு திட்டத்தை சமர்ப்பித்து, அதனை சந்தைப்படுத்திவருகின்றது. ஆயிரம் ரூபாவுக்கு மேல் வழங்குவதற்கு தயார் என்ற தொனியில்கூட பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் கூட்டு ஒப்பந்த பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளும் தொழிற்சங்கங்கள் தமது தரப்பு திட்டத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. எவ்வாறு, எப்படி, எவ்வளவு சம்பள உயர்வை வழங்கலாம் என்பதற்கான சூத்திரம் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதனை முன்னிலைப்படுத்தியே பேச்சு இடம்பெற்றிருக்க வேண்டும். அதனைவிடுத்து ஆயிரம் வேண்டும் என வாய்வார்த்தையில் மட்டும் மல்லுக்கட்டிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை.

மறுபுறத்தில் அரசாங்கமும் ஆயிரம் குறித்து கதைக்கின்றதே தவிர தமது உறுதியான - இறுதியான திட்டத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. இதனால் சம்பள உயர்வுக்கான சமரில் கம்பனிகளே முன்னிலை வகிக்கின்றன. தொழிற்சங்கங்கள் பலவீனமான கட்டத்தில்தான் உள்ளன என்பது புலப்படுகின்றது. இதுவே கம்பனிகளுக்கு ஏதோவொரு விதத்தில் பலமாக அமையும்.

எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுபட வேண்டும். ஒரு மேசையில் அமர்ந்து பொதுவான - காத்திரமானதொரு சம்பள முன்மொழிவு திட்டத்தை உடன் தயாரிக்க வேண்டும். அதனைவிடுத்து ஒவ்வொரு தரப்பும் வெவ்வேறான அறிவிப்புகளை விடுப்பதும் கம்பனிகளுக்கே சாதகமாக அமைந்துவிடும்.

அதேவேளை, சம்பள உயர்வு குறித்து கவனம் செலுத்து நிலையில், தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதிலும் விழிப்பாக இருக்கவேண்டும்-என்றார்.

# மண்சரிவில் சிக்குண்டு ஒருவர் பலி

கொழும்பு, ஜன. 28

கண்டி -ஹபுகஸ் பகுதியில் வீட்டின் பின்புறம் ஏற்பட்ட மண் மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றொரு நபர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை வீட்டின் பின்புறம் சுவருக்கு அடித்தளம் தோண்டும்போது 10 அடி உயர மண் மேடு சரிந்து விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டமை தெரியவந்துள்ளது.



# தடுப்பூசி போடுமாறு எவரையும் நாம் கட்டாயப்படுத்தமாட்டோம்

## கூறுகிறார் லலித் வீரதுங்க

கொழும்பு, ஜன. 28

தடுப்பூசி போடுமாறு எவரும் கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள் என்று கொரோனா தடுப்பூசித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி போடவுள்ளவர்கள், தாமாக முன்வந்து ஊசி போட்டுக்கொள்வதாகவும், கட்டாயப்படுத்தலினால் போடவில்லை எனவும் கூறி விண்ணப்பம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும். ஆனாலும் அனைவரையும் தடுப்பூசி போடுமாறு ஊக்குவிப்போம் என்றும் லலித் வீரதுங்க கூறினார்.

# அருந்திக்கவுக்கும் கொரோனா உறுதி

கொழும்பு, ஜன. 28

இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது.

அண்மையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று



உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் 31 பேரும் பணியாளர்கள் பலரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்றில் சகலருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கவேண்டுமென சபாநாயகர் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாட்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் பாராளுமன்றில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதேபோன்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, அமைச்சர் பியல் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார ஆகியோருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் பூரண குணமடைந்து சிகிச்சை நிலையத்தில் இருந்து வெளியேறியுள்ளனர்.

ஆனால் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, அமைச்சர் பியல் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார ஆகியோர் கேகாலை வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# இந்திய மீனவர் அத்துமீறலுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் மாவட்டக் கடற்றொழிலாளர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நேற்று புதன்கிழமை முன்னெடுத்தனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவதை இந்திய மீனவர்கள் நிறுத்தவேண்டும் என வலியுறுத்தியும், இலங்கை அரசிடம் நீதி கோரியும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களினால் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள கடற்றொழில், நீரியல் வளத் திணைக்கள முன்றலில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் ஆரம்பமான பேரணி, யாழ்ப்பாணம் மாநகரம் ஊடாக ஸ்ரானி வீதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தைச் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள், தமது கோரிக்கை மனுவை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கினர்.

(அ-03)

---


Chinese Embassy in Sri Lanka
@ChinaEmbSL

China will donate 300k #COVID19 #vaccine doses manufactured by #Sinopharm to Sri Lanka.

China and Sri Lanka enjoy historical friendship and have always been strongly supporting each other including in the joint fight against the COVID-19 pandemic.

# 3 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் பெப்ரவரி நடுப்பகுதியில் வந்துசேரும்

### சீனத் தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 28

இலங்கைக்கு சுமார் 3 இலட்சம் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை வழங்க முடிவு செய்துள்ளதாக சீன அரசு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

மிகப்பெரிய உள்நாட்டு மற்றும் சர்வதேச தேவையுடன் ஒப்பிடும்போது தடுப்பூசியின் உற்பத்தித் திறன் இன்னும் குறைவாக இருந்தாலும் நன்கொடை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன தேசிய மருந்துக் குழு நிறுவனம் (சினோபார்ம்) தயாரிக்கும் இந்த தடுப்பூசியை பெப்ரவரி நடுப்பகுதியில் இலங்கைக்கு ஒப்படைக்க எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் -19 தொற்று நோயைத் தடுப்பதில் 79-86 வீத செயற்திறன், கடுமையான மற்றும் மிதமான நோய்களைத் தடுப்பதில் 100வீத செயற்திறன் கொண்ட சினோபார்ம் தடுப்பூசி பல நாடுகளில் ஏற்கனவே மூன்றாம் கட்ட சோதனைகளை கடந்துவிட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சேர்பியா, எகிப்து, பஹ்ரைன், ஜோர்தான், ஈராக், பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட பல நாடுகளில் இந்த தடுப்பூசி பொது பயன்பாட்டுக்கான ஒப்புதலைப் பெற்றுள்ளது என்றும் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீஷெல்ஸ் ஜனாதிபதி, பஹ்ரைன் பிரதமர், ஜோர்தான் பிரதமர், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துணைத் தலைவர் மற்றும் பிரதமர், சேர்பிய சுகாதார அமைச்சர் உள்ளிட்ட வெளிநாட்டு தலைவர்கள் இந்த தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

# ஹற்றன் பாடசாலை ஒன்றில் 11 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஜன. 28

ஹற்றன் பகுதியிலுள்ள ஆண்கள் பாடசாலை ஒன்றில் 11 பேருக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளதாக அம்பகமுவ பதில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.காமதேவன் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையில் பயிலும் மாணவர் ஒருவருக்கு கடந்த 21 ஆம் திகதி தொற்று உறுதியானது.

இந்த நிலையில் அவருடன் தொடர்புடைய மேலும் 11 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் இரண்டு ஆசிரியர்களும் அடங்குகின்றனர்.

அவர்களுடன் தொடர்புடையவர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அம்பகமுவ பதில் மேற்பார்வை பொதுச் சுகா தாரப் பரிசோதகர் எஸ்.காமதேவன் கூறினார்.

(அ)

---

# வெடுக்குநாறி ஆலயத்தினர் நேற்று பிணையில் விடுதலை

### பொலிஸாரின் குற்றப்பத்திரம் நிராகரிப்பு

வவுனியா, ஜன. 28

**வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஷ்வரர் ஆலயத்தின் தலைவர், நிர்வாகி மற்றும் பூசகர் ஆகியோர் தொல்லியல் சின்னங்களுக்குச் சிதைவை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்று முன் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.**

ஆலயத்துக்குச் செல்லும் ஏணியை சேதப்படுத்தியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்துக்கு சந்தேக நபர்கள் சார்பில் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட நிலையில் அதனை நீதிமன்றம் நிராகரித்து கட்டளை வழங்கியது.

நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட் திணைக்களமும், நெடுங்கேணிப் பொலிஸாரும் பல் வேறு தடைகளை ஏற்படுத்தி வந்தனர்.

அத்துடன், ஆலய நிர்வாகம், பூசகருக்கு எதிராக தொல்லியல் சின்னங்களுக்குச் சிதைவை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் கடந்த ஒக்ரோபர் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஆலயத்தின் சார்பில் தலைவர் சசிகுமார், செயலாளர் தமிழ்ச்செல்வன், பூசகர் மதிமுகராசா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

சமாதானதுக்கு குந்தகம் விளைவித்தனர் என்று சந்தேக நபர்கள் மீது குற்றச்சாட்டை முன்வைத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பம் செய்திருந்தனர்.

அதனை நிராகரித்த நீதிவான், தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் ஆலய நிர்வாகத்தினரை விடுவித்ததுடன், கடந்த நவம்பர் 6ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நவம்பர் 6ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த நிலையில், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படாமல் ஜனவரி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கை மன்றில் அழைக்குமாறு தொல்பொருள் திணைக்களம், பொலிஸார் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளால் நீதிமன்றில் கடந்த டிசெம்பர் 11ஆம் திகதிக்கு நகர்த்தல் பத்திரம் அணைக்கப்பட்டது.

எதிரிகளுக்கு தகவல் வழங்கப்படவில்லை. வழக்கு அழைக்கப்பட்டது. எனினும் எதிரிகள் முன்னிலையாகததால் அவர்களைக் கைது செய்ய மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு கடந்த வாரம் விசாரணைக்கு வந்தபோது, ஆலய நிர்வாகி தமிழ்ச்செல்வன், தலைவர் சசிகுமார் மற்றும் பூசகர் மதிமுகராசா ஆகியோர் மன்றில் முன்னிலையாகியபோது, அவர்கள் பிணை நிபந்தனையை மீறியதாக நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்று ஆலய நிர்வாகிகள், பூசகர் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட 16 சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகினர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக பொலிஸாரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அந்தக் குற்றப்பத்திரத்தை நீதிவான், வழங்க முன்னர் ஆட்சேபனை தெரிவித்து சமர்ப்பணம் செய்யவேண்டும் என ஜனாதிபதி சட்டதரணி எம்.ஏ. சுமந்திரன் மன்றில் கூறினார்.

அவருக்கு சமர்ப்பணத்தை முன்வைக்க மன்று அனுமதியளித்தது.

“பொலிஸாரால் காரணமின்றி தாக்கல் செய்யப்படும் குற்றப்பத்திரத்தை நீதிவான் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆலயத்துக்குச் செல்வதற்கு பலகையால் அமைக்கப்பட்ட ஏணியை அகற்றி இரும்பினாலான ஏணியை அமைத்தனர் என பொலிஸார் குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர். அதற்கு உரிய அனுமதிகள் பிரதமர் மட்டத்தில் பெறப்பட்டுள்ளன. பொது நிதி பெறப்பட்டுள்ளது.

அதற்கான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்கின்றேன். அத்துடன் சந்தேக நபர்கள் ஆலய நிர்வாகிகள் என்பதால் குற்றச்சாட்டப்பட்டுள்ளனர். பொலிஸார் உரிய புலன்விசாரணைகளை முன்னெடுத்து அந்த ஏணியை மாற்றியவர்களை அடையாளப்படுத்தவில்லை.

எனவே, அடிப்படையற்ற குற்றப்பத்திரத்தை மன்று நிராகரிக்கவேண்டும்” என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பணம் செய்தார்.

சந்தேக நபர்கள் சார்பிலான சமர்ப்பணத்தை ஏற்று பொலிஸாரின் குற்றப்பத்திரத்தை நிராகரித்து வவுனியா நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.

பொலிஸார் உரிய புலன் விசாரணைகளை முன்னெடுக்க அறிவுறுத்திய மன்று சந்தேக நபர்களை முன்னைய பிணையில் விடுவித்து உத்தரவிட்டது.

அத்துடன் வழக்கு விசாரணை மே 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(அ)

# நெடுந்தூர பஸ் நிலையம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

*அமைச்சர் டக்ளஸ், அங்கஜன் எம்.பி., ஆளுநர் முன்னிலையில் மாநகர முதல்வர் மணிவண்ணன் நேற்று திறந்து வைத்தார்*





**யாழ்ப்பாணம், ஜன.28**

**நகர அபிவிருத்தி மற்றும் கரையோர பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினரால்120 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.**

கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மக்கள் பயன்பாட்டுக்காக வைபவ ரீதியாக பஸ் நிலையத்தை திறந்துவைத்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் குறித்த நெடுந்தூர பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்ட இந்த நெடுந்தூர பஸ் நிலையம் யாழ். மாநகரசபையிடம் கையளிக்கப் பட்டது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரணவில, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

(அ-03)



நெடுந்தீவு கடலில் கொல்லப்பட்ட

## இந்திய மீனவர்கள் நால்வருக்கும் யாழ்.பல்கலையில் நேற்று அஞ்சலி

*யாழ்ப்பாணம், ஜன. 28*

நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்படையின் படகுடன் மோதுண்டு மீன்பிடிப் படகு விபத்துக்குள்ளாகியதில் கடலில் மூழ்கி உயிரிழந்த இந்திய மீனவர்கள் நால்வருக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் இந்த அஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 10.15 மணியளவில் இடம்பெற்றது.

அஞ்சலி நிகழ்வின் இறுதியில் கண்டன அறிக்கை ஒன்றும் மாணவர்களால் வாசிக்கப்பட்டு ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது.

தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே தமிழக மீனவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்று கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் அனைவருக்கும் அன்ரிஜென் சோதனை

*கொழும்பு, ஜன. 28*

இன்று போயா விடுமுறை என்பதால் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் அனைவருக்கும் கொவிட் 19 பரிசோதனை மேற்கொள்ள பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் 11 இடங்களில் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்று முதல் பெப்ரவரி முதலாம் திகதி வரை மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் ஒவ்வொரு நபரிடமும் கொவிட் பரிசோதனை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக அஜித் ரோஹண கூறினார்.

நீண்ட வார இறுதி விடுமுறை தினம் வருகின்றமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

## வெளிநாட்டில் பணிபுரிபவர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை

*கொழும்பு, ஜன. 28*

நாடு திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ள வெளிநாட்டில் பணிபுரியும் பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டில் பணிபுரியும் பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள-வெளிநாட்டில் பணிபுரியும் ஏராளமான இலங்கைப் பணியாளர்கள் நாடு திரும்ப முடியாமல் தவிப்பதாக இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய கொவிட்-19 தொற்றை கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலணியுடன் கலந்துரையாடி இந்தப் பணியாளர்களை விரைவில் நாட்டிற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தப் பணியாளர்களை அழைத்துவரும் பயணிகள் விமானங்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளல் தொடர்பிலும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்களை தத்தமது இல்லங்களின் இடவசதிக்கேற்ப தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை பெறமுடியுமா என்பது குறித்தும் ஜனாதிபதி செயலணியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதுவரை வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்கள் 32,000 பேர் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், மேலும் 22,483 பேர் தமது நாட்டிற்கு வருகை தருவதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் நிலையங்களின் இடவசதியை கருத்திற்கொண்டு இதுவரை அந்தப் பணியாளர்கள் நாட்டுக்கு வருவதற்கான விமான சேவை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக ஸ்ரீலங்கன் விமான சேவையின் தலைவர் அசோக் பத்திரகே தெரிவித்தார்.

## 340 கிலோ மஞ்சளுடன் மூவர் கைது!

*கொழும்பு, ஜன. 28*

நுரைச்சோலை-தளுவ கடற்பகுதியில் கடல்மார்க்கமாக இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட மஞ்சள் மற்றும் தடை செய்யப்பட்ட களைக்கொல்லி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது அவை கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய 70 லட்சம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 340 கிலோகிராம் மஞ்சள் மற்றும் தடை செய்யப்பட்ட களைகொல்லியான கிளைபோசெட் 800 பொதிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பின்போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நுரைச்சோலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# தொட்டதெல்லாம் துலங்கும் தைப் பூசம்

இன்று அனைத்து முருகன் கோயில்களிலும் தை பூசத் திருவிழா கோலாகலமாக நடைபெறுகிறது. தமிழ் கடவுளான முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமானது தைப்பூசம் ஆகும். அடியார்கள் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள்.இந்த நாளில் அனைத்து முருகன் கோவில்களிலும், சிவன் கோவில்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

தை மாதம் உத்தராயண காலத்தின் ஆரம்பம். உத்த ராயணம் என்பது தேவர்களின் பகல் பொழுது என்ப தால் தை மாதம் அவர்களின் காலைப் பொழுதாகும். பௌர்ணமி தினத்தில் சிவாம்சமான சூரியன் மகர ராசியில் இருக்க, சக்தி அம்சமான சந்திரன் கடகராசியில் (பூசம் நட்சத்திரம்) ஆட்சி பெற் றிருக்க சூரிய சந்திரர்கள் பூமிக்கு இருபுறமும் நேர் கோட்டில் நிற்க "தைப்பூச திருநாள்" அமைகின்றது.

தைப்பூசத்தன்று அதி காலையில் எழுந்து குளித்து விட்டு, திருநீறு, உருத்திராட்சம் அணிந்து சிவபெருமானை வழி படுவர். தேவாரம், திருவாசகம் போன்றவற்றைப் பாராயணம் செய்வர். உணவு உண்ணாமல் 3 வேளைகளிலும் பால், பழம் சாப் பிடலாம். மாலையில் கோயிலுக்குச் சென்று சிவ பூசையில் பங்கேற்று சிவனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்வர். முருகப்பெருமானுக்கும், தைப்பூசத்திற்கும் உள்ள இத்தகைய தொடர்பின் காரணமாகவே இந்த நாளில் அனைத்து முருகன் கோயில் களிலும் சிறப்பு விழாக்கள் நடத்தப்படு கின்றன.

தைப்பூச திருநாளில் தொட்டதெல் லாம் துலங்கும்" என்பது பழமொழியாக அமைவதால் அன்றைய தினம் குழந்தை களுக்கு காது குத்துதல், வித்யாரம்பம் எனப்படும் கல்வி தொடக்குதல் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பித்தல், ஒப்பந்தங்கள் செய்தல் போன்ற நற்செயல்கள் மேற் கொள் ளப்பெறுகின்றன. இத் தைபூசத்திருநாளிலே தொடங்கும் செயல்கள் தொய்வின்றி இனிதே நிறைவேறும் என்பது காலம் காலமாக நாம் கொண்டுள்ள நம்பிக்கையாகும். தைப்பூச நன்னாளானது உலக சிருஷ்டியின் ஆரம்ப நாளாகவும் கொள்ளப்படுகின்றது. சிவசக்தி ஐக்கியம் இந்நாளிலேயே நிகழ்ந்ததாகவும் ஐதீகம்.

### பஞ்ச பூதங்கள் உருவான நாள்

சிவனும் சக்தியும் இணைந்ததாலேயே உலகம் சிருஷ்டிக்கப்பட்டு இயக்கம் நிகழ்ந்தது என்பது பொருளாக அமைகின்றது. சிவசக்தி இணைந்த இப்புண்ணிய தினத்தில் முதலில் உருவாகியது நீரென்றும், அதன் பின் தொடர்ந்து நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்ஆகியவை உருவாகின என்றும் நம் பிக்கை கொள்கின்றோம். எனவே உலக இயக்கத்திற்கு ஆதாரமாக அவசியமாகவுள்ள பஞ்சபூதங்களும் சிருஷ்டிக்கப்பட்ட, வழிகோலிய புனிதமிகு நன்னா ளாக இத் தைப்பூச தினத்தைப் போற்றி வழிபாடு செய்கின்றோம்.

### பூசத்தின் அதிதேவதை குருபகவான்

தேவர்களின் குருவாகக்கொள்ளப்படும் பிரகஷ்பதி (குரு பகவான்) பூச நட்சத்திரத்தின் தேவதையாகக் கொள்ளப்படுகின்றார். இவர் அறிவின் தேவதையாகவும் போற்றப்படுகின்றார். பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்கள் இருவருக்கும் சிவபிரானாகிய நடராசப்பெருமான் சிவதாண்டமாடிக் காணுப்படி செய்தநாளாகவும் தைப்பூசம் விளங்குகின்றது. அத்துடன் வாயுபகவானும், வர்ணபகவானும், அக்கினி பகவானும் சிவபிரானின் அதீத சக்தியை உணர்ந்த நாளாகவும் இந்நாள் போற்றப்படுகின்றது. அதாவது இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியாக இறைவனே உள்ளமை உணர்த்தப்பட்ட புண்ணியநாள் இத் தைப்பூச நன்னாளாகும்.

### பூசம்

இதனை புஷ்யம் என்றும் குறிப்பிடுவார்கள். சமஸ்கிருதத்தில் 'புஷ்டி' என்றால் 'பலம்' என்று பொருள். அதிலிருந்து மரு வியது புஷ்யம்.

**“சிவனும் சக்தியும் இணைந்ததாலேயே உலகம் சிருஷ்டிக்கப்பட்டு இயக்கம் நிகழ்ந்தது என்பது பொருளாக அமைகின்றது. சிவசக்தி இணைந்த இப்புண்ணிய தினத்தில் முதலில் உருவாகியது நீரென்றும், அதன் பின் தொடர்ந்து நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்ஆகியவை உருவாகின என்றும் நம்பிக்கை கொள்கின் றோம். எனவே உலக இயக்கத்திற்கு ஆதார மாக அவசியமாகவுள்ள பஞ்சபூதங்களும் சிருஷ்டிக்கப்பட்ட, வழி கோலிய புனிதமிகு நன்னா ளாக இத் தைப்பூச தினத்தைப் போற்றி வழிபாடு செய்கின்றோம்”**



மூ ன் று நட் சத்திரங்கள் புட லங்காய் போலத் தோற்றமளிக்கும். 27 நட்சத்திரங்க ளில், சிறப்பு வாய்ந்த சில நட்சத்திரங்களில் பூசமும் ஒன்று! பூசம் என்பது இந்திய வானியலிலும் சோதி டத்திலும் இராசிச் சக்கரத்தில் பேசப்படுகின்ற 27 நட்சத்திரங்களில் எட்டாவது நட்சத்திரம் ஆகும்.

இந்நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அறிவாளி, மென்பேச்சு மற்றும் ஆன்மீகவாதிகளாக இருப்பார்கள் அறிவுசார்ந்த வேலைகளில் மிகுந்த ஈடுபாடுடன் இருப்பார்கள் என்பது சோதிட நம்பிக்கை ஆகும். நட்சத்திர சிந்தாமணி எனும் நூலில் பூசநட்சத்திரத்தை பற்றி கூறுகையில் "பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நல்ல மதிப்பு உடையவர்களாகவும், வழக்கறிந்து வழக்காட வல்லவர்களாகவும் குற்றமற்ற ரத்தினங்களும் ஆபரணங்களும் அணிந்து மகிழ்பவர்களாகவும் விளங்குவார்கள் என்கிறது. இராமாயணத்தில் பரதன் பூசநட்சத்திரத்தில் பிறந்தான் என்பது உலகறிந்ததே. இதைக் கம்பரும் உறுதி செய்கிறார்.

### புகழ் உச்சம் தரும் பூசம்

என்னுடைய ஆய்வில் நான் கவனித்தவரை பூசநட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திருமணவாழ்வு சற்று ஏறக்குறைய இருந்தாலும் (பூச நட்சத்திர புணர்ப்பு தோஷமும் காரணம் தானே) ஏதோ ஒரு விதத்தில் சாதனையாளர் களாகத்தான் இருக்கிறார்கள். சிலர் ஆன்மீகத்தில் உச்சம் தொட்டிருக்கிறார்கள். சித்தர்களில் கமல முனி சித்தர் தை பூசத் தில் பிறந்தவர் என்கிறது வரலாறு.

சிலர் அரசியலில் புகழ் பெற்றிருக்கிறார்கள். மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் பிறந்தது தை பூசம் என்கிறது நூ ல்கள். சிலர் ஆடல் பாடல் சினிமா கலை துறையில் உச்சம் தொட்டிருக்கிறார்கள். சிலரோ தியாகத்தில் உச்சம் தொட்டிருக்கிறார்கள். தன் உயிரை கூட துச்சமாக மதித்து பலரை காப்பாற்றி புகழின் உச்சியை அடைந்தவர்களும் இந்த தை பூசத்தில் பிறந்தவர்கள் தான். இராமாயணத்தில் அண்ணன் இராமனுக்காக ஆட்சியை தியாகம் செய்த பரதன் பூச நட்சத்திரத்தில் பிறந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக சனிக்கிழமையன்று ஏதாவது ஒரு வேலையை தொடங்குவதென்றால் அந்தவேலை வளரும் என்று பலரும் தொடங்க யோசிப்பார்கள். ஆனால் சனியின் ஆதிக்கத்தில் ஒரு நற்காரியத்தை தொடங்கினால் தர்ம கர்மாதியான சனி அதை பலமடங்கு வளர செய்து புகழ்பெற செய்வார் என்பதுதான் உண்மை. பூசநட்சத்திர அதிபதி சனி. பூச நட்சத்திரத்தின் அதிதேவதை குரு. இவர்கள் இருவரும் இனைந்த தை பூச தினத்தில் வள்ளலார் ஆரம்பித்த அன்னதானம் இன்றும் கொடிகட்டி பறக்கிறது என்பது கண்கூடு. உலக சிருஷ்டியின் சிருஷ்டிகர்த்தாவின் மாபெரும் சக்தியின் உண்மையை உள்ளத்தில் இருத்தி அச்சம் இல்லாத நிம்மதியான பெருவாழ்வை எதிர் கொள்ள இத்தைப்பூச நன்னாளிலே சிவசக்தி பேரருளை நாடி வழிபடுவோம். ■

# யார் இந்த சசிகலா?

## ஜெயலலிதாவுடனான நட்பு முதல் கொரோனா தொற்று வரை

- ஜெய் -



**சொ**த்துக் குவிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு சிறையிலிருந்து விடுதலையாகும் வி.கே. சசிகலாவின் பின்னணி என்ன? ஜெயலலிதாவின் தோழி என்பது மட்டும்தான் அவரது அடையாளமா?

ஒரு சாதாரண குடும்பத் தலைவி என்ற நிலையிலிருந்து, தமிழகத்தின் சக்திவாய்ந்த பெண்மணியின் தோழி, ஆளும் கட்சியின் தலைவர் என்ற நிலைவரை உயர்ந்த சசிகலாவின் வாழ்க்கைப் பயணம் நம்ப முடியாத பல திருப்பங்களையும் ஏற்ற இறக்கங்களையும் கொண்டது.

1984ஆம் ஆண்டு ஆழ்வார்பேட்டை பீமண்ண தோட்டத் தெருவில் வினோத் வீடியோ விஷன் என்ற வீடியோ கடையை வைத்திருந்தார் சசிகலா. அவரது கணவர் ம. நடராசன் கடலூர் மாவட்ட அரசு மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்தார். அப்போது கடலூர் மாவட்ட ஆட்சியராக இருந்தவர், சந்திரலேகா ஐ.ஏ.எஸ்.

அந்த நேரத்தில் கடலூரில் நடந்த ஜெயலலிதாவின் கூட்டத்தை வீடியோ பதிவு செய்யும் கட்டளை, சந்திரலே காவின் பரிந்துரையின் பேரில் வினோத் வீடியோ விஷனுக்குக் கிடைத்தது. வி.கே. சசிகலா இப்படித்தான் ஜெய லலிதாவுக்கு முதன் முதலாக அறிமுகமானார். இந்த அறிமுகம் மிகச் சாதாரணமாக இருந்தாலும், அதனைத் தொடர்ந்த சம்பவங்கள் அசாதாரணமானவை.

1956இல் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டியில் விவேகானந்தன் - கிருஷ்ணவேணி தம்பதியின் மகளாக சசிகலா பிறந்தார். அவரோடு உடன் பிறந்தவர்கள் ஐந்து பேர் - சுந்தரவதனன், வினோதகன், ஜெயராமன், வனிதாமணி, திவாகரன். திருத்துறைப்பூண்டி யில் பிறந்து வளர்ந்தாலும் சில ஆண்டுகள் கழித்து, அவரது குடும்பம் மன்னார்குடிக்கு குடிபெயர்ந்தது. பத்தாம் வகுப்புவரை படித்தார் சசிகலா.

மன்னார்குடிக்கு அருகில் இருந்த விளார் என்ற ஊரைச் சேர்ந்த ம. நடராசனை 1973 ஒக்ரோபர் 16ஆம் திகதி, அப் போது தஞ்சை மாவட்டத்தில் செல்வாக்கு மிகுந்த தலை வராக இருந்த மன்னை நாராயணசாமி தலைமையில் திரு மணம் செய்துகொண்டார் வி.கே. சசிகலா. திருமணத்தை நடத்திவைத்தது, அப்போதைய முதலமைச்சர் மு. கருணாநிதி.

1984இல் ஜெயலலிதாவுக்கு அறிமுகமான சசிகலா, மெல்ல மெல்ல அவரது நம்பிக்கையைப் பெற்றவராக வளர ஆரம்பித்தார். ஜெயலலிதா மாநிலங்களவை உறுப்பினராக இருந்த காலத்தில் அவரோடு டில்லி செல்லும் அளவுக்கு நெருக்கமானார். முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு இந்த நெருக்கம் இன்னும் தீவிரமானது. எம்.ஜி.ஆர். மரணமடைந்து அவரது உடல் ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தபோது, ஜெயலலிதா அவரது தலைமாட்டில் நின்றுகொண்டிருந்தார். அந்தத் தருணத்தில் அவரைச் சுற்றி வளைத்துப் பாதுகாத்தது தங்களது குடும்பம்தான் என பிற்காலத் தில் ஊடகங்களில் தெரிவித்தார் நடராஜன்.

1988 இலிருந்து ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார் சசிகலா. இந்த காலகட்டத்தில்தான் ஜெயலலிதா வெகுவாக சசிகலாவைச் சார்ந்திருப்பவராக மாறினார். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு கட்சி இரண்டாக உடைந்த நிலையில், 1988 பெப்ரவரியில் ஜெயலலிதா அணியின் பொதுக்குழு கூடியபோது, சசிகலா தம்பதியின் நம்பிக்கைக்கு உரியவர்கள் மட்டுமே, அந்த அணியின் ஆட்சி மன்றக் குழுவில் இடம்பெற்றனர். ஆரம்ப காலத்திலிருந்து ஜெயலலிதா அணியிலிருந்தவர்களுக்கே அந்தக் குழுவில் இடம் இல்லாமல் போனது. அந்த அளவுக்கு சசிகலாவின் செல்வாக்கு போயஸ் கார்டனில் வளர்ந்திருந்தது.

1991இல் ஜெயலலிதா முதன் முறையாக தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற சமயத்தில், அவருக்கு எல்லாமுமாக மாறியிருந்தார் சசிகலா. அப்போதி லிருந்து ஜெயலலிதா, அம்மாவாகவும் சசிகலா சின்னம்மாவாகவும் அழைக்கப்பட ஆரம்பித்தார்கள். ஜெயலலிதா எங்கு சென்றாலும் நிழலாகப்பின்தொடர்ந்தார் சசிகலா. இதற்கு முன்பே, சசிகலாவின் கணவர் நடராஜன், சசி கலாவின்சகோதரர்கள், அவர்களது குடும்பத்தி னரின் ஆதிக்கமும் அ.தி.மு.கவின் மீது படர ஆரம்பித்திருந்தது.

1995இல் சசிகலாவின் உறவினரான வி.என். சுதாகரனை தனது தத்துப் பிள்ளையாக தத்தெடுக்கும் அளவுக்கு சசி கலாவை நம்பினார் ஜெயலலிதா. சுதாகரனுக்கு ஜெயலலிதா செய்து வைத்த ஆடம்பரத் திருமணம், உலகில் மிக வும் செலவழித்து நடத்தப்பட்ட திருமணமாக கின்னஸ் சாதனை படைத்தது.

ஆனால், ஜெயலலிதா தனது முதலாவது ஆட்சிக் காலத்தின் இறுதியில் மக்களால் மிகவும் வெறுக்கப்பட் டதற்கு சசிகலாவின் உறவினர்கள் செய்ததாகக் கூறப்படும் முறைகேடுகளும் ஒரு காரணமாக அமைந்தன. இந்த காலகட்டத்தில், அ.தி.மு.கவின் மூத்த தலைவர்கள் பலர், கட்சியிலிருந்து ஒதுங்க ஆரம்பித்தனர். இதன் பின்னணியில் சசிகலா இருந்ததாகக் கூறப்பட்டது.

1996இல் ஆட்சி போன பிறகு, ஜெயலலிதாவும் சசிகலாவும் இணைந்தே சிறைக்குப் போக நேர்ந்தது. இதனால், சிறிது காலத்திற்கு சசிகலாவை ஒதுக்கி வைக்கவும்செய்தார்ஜெயலலிதா. ஆனால், இது வெகுநாட்கள் நீடிக்கவில்லை. மீண்டும் வெகுசீக்கிரத்திலேயே போயஸ் தோட்ட இல்லத்தில் தலைகாட்ட ஆரம்பித்தார் சசிகலா.

அதற்குப் பிறகு, 2011வரை போயஸ் தோட்ட இல்லத்திலும் அ.தி.மு.க என்ற கட்சியிலும் சசிகலாவின் அனுமதி யின்றி எதுவும் நடக்காது என்ற நிலை ஏற்பட்டது. 2011இல் மீண்டும் முதலமைச்சராகியிருந்த ஜெயலலிதா, தனக்கு எதிராக சசிகலா செயல்படுவதாகக் கருதினார். விளைவு, 2011 டிசெம்பர் 19ஆம் திகதி சசிகலா உட்பட அவரது குடும்பத்தினர் அனைவரையும் கட்சியிலிருந்து நீக்கினார் ஜெயலலிதா.

இந்த நடவடிக்கையில் சசிகலா போயஸ் கார்டனிலிருந்து வெளியேற்றப்பட்டார். நடராஜன், திவாகரன், தினகரன், பாஸ்கரன், சுதாகரன், டாக்டர் வெங்கடேஷ், ராமச்சந்திரன், ராவணன், மோகன் உள்ளிட்ட சசிகலாவின் உறவினர்கள் அ.தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்டனர்.

ஆனால், இந்தப் பிரிவும் வெகு நாட்களுக்கு நீடிக்கவில்லை. இந்த சம்பவம் நடந்து மூன்று மாதங்களிலேயே அதாவது 2012ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதி சசிகலா எழுதியதாக ஒரு அறிக்கை ஊடகங்களில் வெளியானது. அதில் கட்சி தொடர்பாகவோ, மக்கள் பிரதிநிதி ஆவது தொடர்பாகவோ தனக்கு எந்த விருப்பமும் இல்லை அக்காவுக்கு உண்மையான தங்கையாக இருக்கவே தான் விரும்புவதாக அந்த அறிக்கையில் சசிகலா கூறியிருந்தார்.

இதற்குப் பிறகு, மார்ச் 31ஆம் திகதி சசிகலாவை மட்டும் ஜெயலலிதா கட்சியில் சேர்த்துக்கொண்டார். இதற்குப் பிறகு, ஜெயலலிதா மரணம் வரை இந்த நட்பு நீடித்தது. 2014ஆம் ஆண்டில் சொத்துக் குவிப்பு வழக்கில், இருவருமே ஒன்றாக சிறை சென்றனர்.

**சரணடையச் செல்லுமுன் சமாதியில் சபதம் செய்த சசிகலா**

ஜெயலலிதாவின் நிழலாகவே இருந்தாலும், ஜெயலலிதா உயிரோடு இருந்தவரை கட்சியின் முன்னணியில் ஒரு போதும் சசிகலா தென்பட்டதில்லை. ஆனால், கட்சியின் முக்கியமான தருணங்களில் முக்கியமான முடிவுகளை எடுப்பவராக சசிகலாவே இருந்தார். தேர்தல்களின்போது வேட்பாளர் தேர்வில் சசிகலாவின் செல்வாக்கு எத்தகையது என்பது அ.தி.மு.கவில் உள்ள அனைவருக்குமே தெரியும்.

2002இல் ஜெயலலிதா முதல்வராக பதவிவகிக்க முடியாமல் போனபோது, ஓ. பன்னீர்செல்வம் அந்த இடத்திற்கு முன்னிறுத்தப்பட்டது சசிகலாவின் ஆலோசனையின் பேரில்தான். அதற்குப் பிந்தைய தேர்தல்களில் எல்லாம் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும்போது அதில் சசிகலாவின் பங்கும் இருக்கும். கட்சியின் அனைத்து மட்டங்களிலும் சசிகலாவின் செல்வாக்கு இருந்தது.

2016இல் ஜெயலலிதா உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பிறகு, சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினரைத் தவிர ஆட்சியில் இருந்த யாராலும் அவரைச் சென்று பார்க்க முடியவில்லை என குற்றம்சாட்டப்பட்டது. அந்த ஆண்டு டிசெம்பரில் ஜெயலலிதா இறந்துவிட, சசிகலாவின் பரிந்துரையின் பேரிலேயே நள்ளிரவில் ஓ.பன்னீர்ச்செல்வம்தலைமையில் புதிய அரசு பதவியேற்றது.

ஜெயலலிதா உயிரோடு இருந்தபோது ஒதுக்கிவைக்கப்பட்ட சசிகலாவின் உறவினர்கள், அவர் மறைந்த பிறகு ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலைச் சுற்றி நின்றது கடுமையான விமர்சனங்களுக்குள்ளானது.

விரைவிலேயே சசிகலாவின் உண்மையான விருப்பம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியாக ஆரம்பித்தது. ஓ. பன்னீர்ச்செல்வம் முதல்வராக இருந்த காலத்திலேயே தினமும் போயஸ் கார்டனுக்குச் செல்லும் அமைச்சர்கள், சசிகலாவை கட்சித் தலைமை ஏற்க வலியுறுத்தும் காட்சி கள் அரங்கேறின. இது தொடர்பான புகைப்படங்களும் வீடியோ காட்சிகளும் ஊடகங்களுக்கு பகிரப்பட்டன.

ஜெயலலிதா மறைந்து சில நாட்களில், அதாவது டிசெம் பர் பத்தாம் திகதியன்று தமிழ் காலை நாளிதழ் ஒன்றில் வெளியான முழுப்பக்க விளம்பரத்தில், “புரட்சித் தலைவி அம்மாவிற்கு காலன் தன்னை வென்றிடுவான் என்று தெரிந்திருந்தால் தனக்குப் பிறகு எல்லாமே சின்ன அம்மாதான் என்று சொல்லி இறைவனடி சேர்ந்திருப்பார்” என கூறப் பட்டிருந்தது. இந்த விளம்பரத்தை அளித்தவர் பெயர் ஏதும் இல்லாமல், “விசுவாசத் தொண்டனின் மனசாட்சி” என்ற பெயரில் அந்த விளம்பரம் வெளியாகியிருந்தது.

அன்றைய தினமே, முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் பெயரில் வெளியான அறிக்கையில், “ஜெயலலிதாவைப் போல கட்சியை ராணுவ அமைப்பைப்போல நடத்துவதற்கு சசிகலா பொதுச்செயலாளர் ஆவதுதான் ஒரே வழி” என கூறப்பட்டிருந்தது.

இதற்குப் பிறகு டிசெம்பர் 29ஆம் திகதி நடந்த அ.தி.மு.கவின் பொதுக் குழுக் கூட்டத்தில் வி.கே. சசிகலா அக்கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இதன் தொடர்ச்சியாக 2017 பெப்ரவரி ஐந்தாம் திகதியன்று முதலமைச்சர் பதவியை ஓ. பன்னீர்செல்வம்ராஜிநாமா செய்தார். பிறகு அப்போதைய ஆளுநர் வித்யா சாகர் ராவை சந்தித்த சசிகலா, தனக்கு பெரும்பான்மை எம்.எல்.ஏக்களின் ஆதரவு இருப்பதால், தன்னை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டுமெனக் கூறினார்.

ஆளுநர் எந்த முடிவையும் தெரிவிக்காத நிலையில், பெப்ரவரியில் சொத்துக் குவிப்பு வழக்கில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்தது. அதன்படி சசிகலா, அவரது உறவினர்கள் இளவரசி, சுதாகரன் ஆகியோர் சிறைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. முதலமைச்சராக பதவி யேற்போம் என கருதியிருந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அவரது அரசியல் வாழ்க்கைக்கு கிட்டத்தட்ட முடிவுரை எழுதியது.

இதற்குப் பிறகு, எடப்பாடி கே. பழனிசாமியை முதல்வராக்கிவிட்டு சிறையை நோக்கிப் புறப்பட்ட சசிகலா, ஜெயலலிதாவின் சமாதிக்குச் சென்று, அந்த சமாதி மீது அடித்து சபதம் செய்தார். இதற்குப் பிறகு, பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டார் சசிகலா.



அவர் சிறையில் இருந்த காலகட்டத்தில், இவ ரது உறவினர்கள் அனைவரும் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டுவிட்டு, டிடிவி தினகரன் அ.ம.மு.க. என்ற புதிய கட்சியையும் துவங்கி விட்டார். சிறையிலிருந்து விடுதலையாகும் சசிகலாவை மீண்டும் அ.தி.மு.கவில் சேர்க்கும் எண்ணமே இல்லை எனத் தெரிவித்துவிட்டார் எடப்பாடி கே. பழனிசாமி. சசிகலாவும் ஜெயலலிதாவும் இருந்த போயஸ் கார்டன் இல்லம் அரசுடமையாக்கப்பட்டு, அங்கு நினைவில்லமும் அமைக்கப்பட்டுவிட்டது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு தற்போது மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் சசிகலா, சென்னை திரும்பிய பிறகு அ.தி.மு.க. மீது எந்த அளவுக்கு செல்வாக்கு செலுத்த முடியும் என்பது கேள்விக்குறிதான். சட்டமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் நிலையில், அவர் என்ன செய்யப் போகிறார் என்பதுதான் அவரது அரசியல் எதிர்காலத்தை மட்டுமின்றி, அவரைச் சார்ந்தவர்களின் அரசியல் எதிர்காலத்தையும் முடிவு செய்யும். ■

# ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஐ.நாவை திசைதிருப்பும் செயல்

## சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு எதிர்ப்பு

கொழும்பு,ஜன.28

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைத் திசைதிருப்பும் நோக் கில் ஜனாதி பதியால் விசேட ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளதா? என்று சந்தேகம் வெளியிட்டிருக்கும் சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு, இலங்கை யில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான சர்வதேச பொறி முறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.**

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மூவரடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழுவால் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் ஏற்கனவே ஆராய்ந்த குழுக்களின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை மீள ஆராய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.நவாஸ் தலைமையில் மூவரடங்கிய விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நியாயமற்ற விசாரணைப்பொறிமுறை தொடர்பில் இலங்கை மிகமோசமான பதிவுகளைக் கொண்டிருக்கிறது. இது இவ்வாறிருக்க தற்போது புதிய குழுவொன்றை நியமிப்பதென்பது, நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரின் போது மேற்கொள்ளப்படத்தக்க நடவடிக்கைகளைத் திசைதிருப்பும் நோக்கத்தைக் கொண்டதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரின் போது, இலங்கை தொடர்பான அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிப்பார். 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போது 30-1, 34-1, 40-1 ஆகிய தீர்மானங்களிலிருந்து விலகுவதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அறிவித்தார்.

இந்நிலையில் தற்போது அமைக்கப்பட்டுள்ள விசேட குழு மற்றும் இதனையொத்த ஏனைய குழுக்கள் செயல்திறனற்றவையாகவும் தமக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் உரிய பொறுப்புக்களை நிறைவேற்றும் இயலுமை அற்றவையாகவுமே இருந்துவந்திருக்கின்றன. இத்தகைய கட்டமைப்புக்கள், அரசியல் ரீதியில் தமக்கு எதிரானவர்களைத் தண்டிப்பதற்கும் தமக்கு வேண்டியவர்களைப் பொறுப்புக்கூறலிலிருந்து பாதுகாப்பதற்கும் உதவுகின்றன என்று எமது அறிக்கையொன்றில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

எனவே உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறையை உறுதிசெய்வதற்கான இயலுமை இலங்கைக்கு இல்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், உள் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடமும் ஆணையாளரிடமும் கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# கிழக்கு முனையத்தை இந்தியா இலக்குவைக்க சீனாவின் ஆதிக்கமே காரணம்

கொழும்பு,ஜன.28

சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் மேலோங்கியதன் காரணமாகவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா இலக்கு வைத்துள்ளது.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் இவ்வாறான நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு வழங்குகின்றன என்று மக்கள்விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிழக்கு முனையத்தை தனித்து அபிவிருத்தி செய்ய முடியாது என்பதாலேயே இந்தியாவுக்கு வழங்குவதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் துறைமுக பொறியியலாளர் சங்கம், அபிவிருத்தி பொறுப்புக்களை ஏற்பதற்கு தாம் தயாராகவுள்ளதாகக் கூறியுள்ளது. ஆனால் ஆசிய நாடுகளில் இந்தியாவும் அமெரிக்காவும் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளதால் இலங்கையில்சீனா அதிகளவு தலையிட்டுள்ளதால்இந்தியாவும்அதற்குச்சமமான வாய்ப்பைக் கோருகிறது.

ராஜபக்ஷக்கள் இவ்வாறு சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அஞ்சி மண்டியிடுகின்றனர். இதன் காரணமாகவே பாரிய எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்ற போதிலும் கிழக்கு முனையத்தை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்குகிறது. இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுப்பதால் அரசாங்கம் அனைவரதும் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளது- என்றார். (எ)

# 2021ஆம் ஆண்டு சுங்க வருமானம் 1000 பில்லியன் ரூபா எதிர்பார்ப்பு

கொழும்பு,ஜன.28

சுங்கத் திணைக்களத்தின் மூலம் கடந்த வருடம் சுமார் 650 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெறமுடிந்தது என நிதி, மூலதனச்சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். இதேவேளை இந்த ஆண்டில் வருமானத்தை 1,000 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சுங்கத் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சுங்கத் திணைக்களத்தில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்கம் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கங்களில் சுங்கத் திணைக்களம் மிகமுக்கியமானதாக திகழ்ந்து வருகின்றது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த வருடம் அரசாங்கத்துக்கு எதிர்பாராத பாரிய செலவுகள் ஏற்பட்டன. அதுமாத்திரமன்றி வைரஸ் பரவலுக்கு முகங்கொடுப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவாக அரச வருமானத்திலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

2020 ஆம் ஆண்டு மிகவும் கடினமான காலப்பகுதியாகவே அமைந்திருந்தது. வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய துறைகள் வீழ்ச்சியடைந்ததுடன், மேலும் சில இடைநிறுத்தப்பட்டன. நாடுகளுக்கு இடையில் பயணத்தடை விதிக்கப்பட்டமையால் சுற்றுலாத்துறை வீழ்ச்சிகண்டது. சர்வதேச கொடுக்கல், வாங்கல் செயல்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டன. இவை அனைத்துக்கும் மத்தியிலும் அரசாங்கத்தின் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் விதமாகவே சுங்கத் திணைக்களம் செயல்பட்டது.



எனவே, அதன் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக சுங்கத் திணைக்களத்தில் நவீன தொழில்நுட்பங்களை விஸ்தரிப்பதற்கான முதலீடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அவற்றைப் பயன்படுத்தி உரிய வழிமுறைகளின் மூலம் மேலும் வருமானங்களை உள்ளீர்ப்பதற்கு சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுங்கத் திணைக்களத்தின் மூலம் கடந்த வருடம் சுமார் 650 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிந்தது. இவ்வருடம் அதனூடாக சுமார் 1,000 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். அதற்கேற்றவாறான செயற்பாடுகளை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும்- என்றார். (எ)

# கிழக்கு முனையம் குறித்து இறுதித் தீர்மானம் இல்லை

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,ஜன.28

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் அரசாங்கம் இறுதித் தீர்மானத்தை எடுக்கவில்லை. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளில் இறுதித் தருணத்தில் மாற்றம் ஏற்பட்டால், இவ்விடயம் தொடர்பில் பலதரப்பட்ட மட்டத்தில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் யோசனைகள் மாத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளதே தவிர தீர்மானங்கள் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. துறைமுக ஊழியர் சங்கம், துறைமுக பொறியியலாளர் சங்கம் முன்வைத்த யோசனைகள் அனைத்தும் பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் ஒருசில தவறான அபிப்ராயங்கள் சமூகமட்டத்தில் முன்வைக்கப்படுகின்றன.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் உரிமம் 51 - 49 வீத அடிப்படையில் பகிரப்படும் யோசனை மட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் துறைமுக, கப்பல்துறை அபிவிருத்தி அமைச்சு மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் வழங்கும் அறிக்கை பாராளுமன்றுக்கு அறிவிக்கப்படும். அதன் பின்னரே அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கிழக்கு முனையம் தொடர்பில் தற்போது முன்வைக்கப்பட்ட யோசனைகள் பல்வேறு மட்டத்தில் பேச்சுக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இறுதித் தருணத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்.

கிழக்கு முனையம் தொடர்பிலான அறிக்கை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படும்- என்றார். (எ)



## துப்பாக்கி சூடு சந்தேகநபர் கைது

பாணந்துறை,ஜன.28

பாணந்துறை, பள்ளிமுல்ல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேகநபரை கைதுசெய்ய மூன்று பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிமுல்ல பகுதியில் அமைந்துள்ள சொகுசு வர்த்தக நிலையமொன்றுக்கு முன்னால் கடந்த திங்கள்கிழமை முற்பகல் 10 மணியளவில் மூவர் பயணித்த ஆட்டோ மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர்.

சந்தேகநபர்கள் அடையாளம் கண்டுகொள்ள முடியாதவாறு முகத்தை மறைக்கும் வடிவிலான தலைக்கவசங்களை அணிந்திருந்ததுடன், ஆட்டோவில் பயணித்த நபரை இலக்குவைத்தே துப்பாக்கிச் சூட்டை நடத்தியமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கெமுனுமாவத்தை பகுதியைச் சேர்ந்த 32 வயது மீனவர் ஒருவரே துப்பாக்கிப் பிரயோகத்துக்குள்ளாகி உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பாணந்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததோடு சம்பவ இடத்திலிருந்து ரி- 56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் நான்கு மீட்கப்பட்டிருந்தன. (எ)

# ஜனநாயகம், மனித உரிமைகள் தொடர்பில் இலங்கைக்கு பாடம் நடத்தத் தேவையில்லை

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அமெரிக்காவுக்கு மிகக்காட்டமான பதில்



கொழும்பு,ஜன.28

**ஜனநாயகம், மனித உரிமைகள், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் எவரும் கற்றுக்கொடுக்க வேண்டிய நிலையில் இலங்கை இல்லை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடனின் வெற்றி முக்கியமானது என்பதை வலியுறுத்தியுள்ள அதே வேளை ஜோ பைடன் தனது நாட்டில் சட்டம் ஒழுங்கை ஏற்படுத்த வேண்டியநிலையில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீள ஏற்படுத்தவேண்டிய நிலையில் காணப்படுகின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இவை கடந்த வருடம் அழிக்கப்பட்டு விட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிலோன் டுடேய்க்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்களையும் வன்முறைகளையும் ஏனைய நாடுகளிலேயே காண்கின்றோம். இலங்கையில் அவ்வாறு இல்லை.

அமெரிக்கா மீண்டும் மனித உரிமை பேரவையில் இணைந்துகொள்ளக்கூடும்.

அமெரிக்கா உலகின் மனித உரிமைகள் தொடர்பில் நேர்மையான அக்கறையை கொண்டிருந்தால், இலங்கை மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடும் நாடில்லை. நாட்டில் தற்போத அமைதி நிலவுகின்றது என்பதை நாங்கள் நினைவுபடுத்த வேண்டியிருக்கும்.

இலங்கை ஒரு வன்முறை நாடில்லை. இங்கு வன்முறைகள் இடம்பெறவில்லை ஏனைய நாடுகளில் இடம்பெறும் சிறிய சம்பவங்களே இடம்பெறுகின்றன. இலங்கையில் இனமத ஐக்கியம் நிலவுகின்றது. இதனை நாங்கள் ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராகவுள்ளோம்- என்றார். (எ)

# இன்று முற்பகல் 11 மணிக்குள் கொரோனா தடுப்பு மருந்து வரும்

## ஜனாதிபதி ஆலோசகர் லலித் உறுதி



கொழும்பு,ஜன.28

இலங்கை கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைப் பெறுவதற்கு சீனா, ரஷ்யாவுடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளது என ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவிததுள்ளார்.

இந்தியாவிலிருந்து முதல் தொகுதி மருந்து இன்று முற்பகல் 11 மணிக்கு வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு இந்தியா 5 இலட்சம் மருந்துகளை வழங்குகின்றது.

மருந்து வழங்கும் நடவடிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். முன்னிலை பணியாளர்கள், முப்படையினர், பொலிஸாருக்கு மருந்துகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

சீனாவும் மருந்துகளை வழங்கத் தயார் எனத் தெரிவித்துள்ளது.

மருந்தைப் பெறுவதற்கான நடைமுறைகள் தொடர்பில் ஆராயப்படுகின்றன. இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை ரஷ்யா மருந்துகளை வழங்கும் என இலங்கை நம்பிக்கையுடன் உள்ளது- என்றார். (எ)



## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 24 பேர் கைது

கொழும்பு,ஜன.28

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 24 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை மேற்படி குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 2 ஆயிரத்து 792 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் 2600 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது- என்றார். (எ)

# பெப்ரவரியில் 1000 ரூபா இல்லையேல் போராட்டம்

## வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு



கொழும்பு,ஜன.28

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வை முன்னிலைப்படுத்தி , மலையகத்தின் பூர்வீக இன பரம்பலை சிதைத்துவிட அனுமதியளிக்க கூடாது என வலியுறுத்திய பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் , பெப்ரவரி 10 ஆம் திகதி அடிப்படை சம்பளம் ஆயிரம் ரூபாய் கிடைக்கப் பெறாவிடின் கடும் போராட்டங்களை முன்னெடுப்பதாகவும் எச்சரித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாவை வழங்குவதாக அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது. அதற்கமைய நிதி அமைச்சராக செயல்பட்டு வரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் இவ்வருடத்திற்காக முன்வைக்கப்பட்ட வரவு செலுவுத்திட்டத்தில், ஜனவரி மாதம் முதல் 1000 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள தினமாகும், அன்றைய தினமாவது அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். இல்லையேல் நாம் பாரிய போராட்டங்களை முன்னெடுப்போம். கூட்டு ஒப்பந்தத்தை பலரும் விமர்சிக்கலாம். ஆனால் அதில் பல நன்மைதரும் விடயங்களும் உள்ளடங்குகின்றன.

கம்பனிகள் 1000 ரூபா சம்பளத்தை வழங்குவதாக குறிப்பிட்டு, தொழிலாளர்களுக்கு பல்வேறு நிபந்தனைகளை வழங்கவும் வாய்ப்புள்ளது. இந்நிலையில் பெருந் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமை மீறாத வகையில் 1000 ரூபா வழங்கு வதுடன், அது அடிப்படை சம்பளமாகவே வழங்க வேண் டும். ஆயிரம் ரூபா என்ற போர் வையில் பெருந்தோட்டக் காணிகளை கொலனிகளாக மாற்றும் முயற்சியும் காணப்படுகின்றது. அதனால் அத்தகைய செயல்பாடுகளை கைவிடுமாறும் நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதேவேளை அரசாங்கத்தால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு திருத்தத்தில் மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்படுமோ? என்ற கேள்வி எமக்கு எழுந்துள்ளது. மாகாண சபை முறையானது சிறுபான்மையினருக்கு நன்மையளிக்கும் முகமாக கொண்டுவரப்பட்டது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபை முறையை இல்லாதொழிப்பதற்கு நாம் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்க மாட்டோம். அதனால் 13 பிளஸ் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்- என்றார். (எ)

## இளைஞன் கொலை: நால்வர் சிக்கினர்

கொழும்பு,ஜன.28

மிடியாகொடை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேக நபர்கள் நால்வரும் நேற்று முன்தினம் மிடியாகொடை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையிலேயே கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை அவர்கள் வைத்திருந்த இரு மோட்டார் சைக்கிள்களும், பல ஆயுதங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் 24 முதல் 32 வயதுக்கு உட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)



இந்திய குடியரசு தினமான நேற்று முன்தினம் தமிழ்நாடு - மாமல்லபுரத்தில் இடம்பெற்ற கலாசார நிகழ்வின்போது...

# இந்திய வம்சாவளி எம்.பிக்களுக்கு அமெரிக்காவில் முக்கிய பதவிகள்





வாஷிங்டன், ஜன. 28

இந்திய வம்சாவளி அமெரிக்க எம்.பி.க்கள் பிரமிளா ஜெயபால், ராஜா கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் பட்ஜெட் குழுவிலும், கொரோனா வைரஸ் சிக்கல் தீர்வுக் குழுவிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்ஸி பெலோசி வெளியிட்டார்.

இதன்படி, அதிகாரம்மிக்க பட்ஜெட் குழுவில் இந்திய வம்சாவளி எம்.பி. பிரமிளா ஜெயபாலும், கொரோனா வைரஸ் சிக்கல் தீர்வுக் குழுவில் 47 வயதாகும் ராஜா கிருஷ்ண மூர்த்தியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ராஜா கிருஷ்ண மூர்த்தி கூறுகையில், "அமெரிக்க மக்களின் சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்ய அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் சிக்கல் தீர்வுக் குழுவின் தலைவர் "க்ளைபர்ன்", மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். கொரோனா வைரஸை தோற்கடித்து நமது பொருளாதாரத்தை கட்டமைப்போம்" எனத் தெரிவித்தார்.

கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து எம்.பியாக இருந்து வரும் இந்தியப் பெண் பிரமிளா ஜெயபால், பட்ஜெட் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பட்ஜெட் குழுவின் தலைவராக எம்.பி. ஜோன் யார்முத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதிநிதிகள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய, அமெரிக்கவாழ் பெண் பிரமிளா ஜெயபால் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரமிளா ஜெயபாலின் முயற்சியால்தான் அமெரிக்காவில் ஒரு மணி நேரத்துக்கு குறைந்தபட்சம் 15 டொலர்கள் ஊதியம் தர வேண்டும் எனும் மாற்றம் கொண்டுவரப்பட்டது என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

## வியட்நாம் நச்சுக்குண்டு வீச்சு :

# பொறுப்புக் கூறலுக்கான முக்கிய வழக்கு பாரிஸில்!

பாரிஸ்,ஜன.28

**வியட்நாம் காடுகள் மீது அமெரிக்கப் படைகள் நடத்திய இரசாயனக் குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட பாதிப்புகளுக்குப் பொறுப்புக் கூறல் தொடர்பான முக்கிய வழக்கு விசாரணை பிரான்ஸில் தொடங்கியுள்ளது.**



வியட்நாமில் களைகொல்லி மருந்துகளை விசிறும் அமெரிக்க விமானங்கள்

பாரிஸ் புற நகரான எஸோன் மாவட்டத்தில் எவ்றி நீதி மன்றத்தில் கடந்த திங்களன்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வியட்நாம் போர் காலத்தில் அமெரிக்க இராணுவத்துக்கு இரசாயனக் களை கொல்லி மருந்துகளை விநியோகித்த நிறுவனங்களுக்கு எதிரான இந்த முக்கிய வழக்கை பிரான்ஸில் வசிக்கும் வியட்நாமிய செயற்பாட்டாளரான பெண் ஒருவர் பல வருடங்களுக்கு முன்னர் தாக்கல் செய்திருந்தார்.

தெற்கு வியட்நாமில் 1942 இல் பிறந்த டிரான் தோ என்கா என்ற பெண்ணே இரசாயன ஆயுதங்களால் தனக்கும் அடுத்த தலைமுறைக்கும் சுற்றுச் சூழலுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளுக்காகப் பொறுப்புக் கூறலுடன் இழப்பீடு கோரும் வழக்கை ஒரு டசினுக்கும் மேற்பட்ட இரசாயனக் களைகொல்லித் தயாரிப்பு நிறுவனங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்தார்.

வியட்நாம் போர் காலத்தில் தனது இருபதாவது வயதில் அங்கு, கம்யூனிஸ்ட் போராளியாகவும் ஊகவியலாளராகவும் மனிதநேயப் பணியாளராகவும் செயல்பட்டிருந்தவர் டிரான் தோ என்கா.

அமெரிக்காவின் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரும் அவரது நீண்ட காலப் போராட்டங்கள் தற்போது குற்றவாளிகளைப் பொறுப்புக் கூற வைக்கின்ற சட்ட நடவடிக்கையை எட்டியுள்ளது.

அந்நாட்களில் மொன் சான்டோ என அழைக்கப்பட்ட ஜேர்மனியின் "பயர்" நிறுவனம் உட்பட 14 இரசாயன களை கொல்லி மருந்துத் தயாரிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக நிறுவனங்களுக்கு எதிராக கடந்த 2014 இல் அவர் தாக்கல் செய்த வழக்கே விசாரணைக்கு வந்துள்ளது.

1961-1971 காலப்பகுதியில் வியட்நாம் மற்றும் லாவோஸ் காடுகள் மீது அமெரிக்க வான்படை விமானங்கள் லட்சக்கணக்கான லீற்றர்கள் என்ற கணக்கில் - 2 கோடி கலன் செறிவு கூடிய இரசாயனக் களை நாசினிகளை வீசின. கெரில்லா போர் முறைகளில் கைதேர்ந்த வியட்நாம் கம்யூனிஸ்ட் போராளிகள் மறைந்திருந்து செயல்பட உதவிய அடர்ந்த வனங்களை அழிப்பதன் மூலம் அவர்களை தோற்கடிக்க இந்தத் திட்டம் நடைமுறையானது.

"ஏஜென்ட் ஒரேஞ்" ('Agent Orange') என்று அழைக்கப்படுகின்ற அந்த நச்சு ஆயுதத் தாக்குதலினால் அடர்ந்த காடுகள் அழிவுண்டன. மனிதர்களும் காட்டு உயிரினங்களும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகினர்.

வியட்நாம், கம்போடியா, லாவோஸ் நாடுகளை உள்ளடக்கிய காடுகளில் இரசாயனக் குண்டுகள் ஏற்படுத்திய தாக்கங்கள் தலைமுறை கடந்து இன்றைக்கும் புற்றுநோய் உட்பட பல நோய்களுக்கு மூலமாக மாறியுள்ளன.

இரசாயனக் குண்டுகளால் பாதிக்கப்பட்ட முன்னாள் வெளிநாட்டுப் போர் வீரர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்ட போதிலும் சிவிலியன்கள் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்ற தாக்கங்களுக்குப் பொறுப்புக் கூறலோ அன்றி நஷ்டஈடுகளோ இது வரை கிடைக்கவில்லை.

# இந்தியாவிலிருந்து 9 நாடுகளுக்கு 60 இலட்சம் தடுப்பூசி விநியோகம்

நியூயோர்க், ஜன. 28

இந்தியாவில் இருந்து 9 வெளி நாடுகளுக்கு 60 இலட்சத்துக்கும் மேற்பட்ட கொரோனா தடுப்பூசிகள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், பல நாடுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பல கட்டமாக தடுப்பூசிகள் அனுப்பப்படும் என்று ஐ.நா. சபை இந்திய பிரதிநிதி தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்பு சபையில், 'சர்வதேச அமைதி, பாதுகாப்பை பராமரித்தல்: 2532 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல் குறித்த தொடர் ஆய்வு' என்ற தலைப்பிலான நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது ஐ.நா.வுக்கான இந்திய துணை வதிவிட பிரதிநிதி கே.நாகராஜ் நாயுடு கூறுகையில்,

'உலகிலேயே அதிகம் தடுப்பூசி தயாரிக்கும் நாடாக, இந்தியா உள்ளது. அதன் தயாரிப்பு மற்றும் விநியோகத் திறன், ஒட்டுமொத்த மனித சமுதாயத்துக்கும் பலனளிக்க வேண்டும் என்ற பொறுப்பை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்.

முதல்கட்டமாக, 9 நாடுகளுக்கு 60 இலட்சம் தடுப்பூசிகளுக்கு மேல் உதவியாக அனுப்பப்பட்டுள்ளன. மேலும் பல நாடுகளுக்கு, ஒப்பந்த அடிப்படையில் பல கட்டமாக தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்படும். உலக சுகாதார நிறுவனத்தின் தடுப்பூசி அமைப்புக்கும் நாங்கள் படிப்படியாக தடுப்பூசிகளை அனுப்பிவைப்போம்.

பல பங்குதாரர் நாடுகளின் மருத்துவ சிகிச்சை திறன்களையும், கொரோனா தடுப்பூசி செலுத்தும் திறனையும் அதிகரிப்பதற்கான பயிற்சியையும் இந்தியா அளித்திருக்கிறது. 150 மேற்பட்ட நாடுகளுக்கு, அவசரகால சுகாதார மற்றும் மருத்துவ விநியோகங்களும் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)



# சசிகலா விடுதலை

பெங்களூர், ஜன. 28

சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற சசிகலா 4 ஆண்டு தண்டனை முடிந்து நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கொரோனா தொற்றுக்கு இலக்காகி பெங்களூர் விக்ரோறியா அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர் குணமடைந்து விட்டார். இந்நிலையில், தொடர்ந்தும் மருத்துவ கண்காணிப்பில் இருக்கும் அவர் தண்டனைக் காலம் முடிவடைந்து நேற்று விடுதலையானார்.

எனினும், அவர் தொடர்ந்தும் குடும்பத்தினரின் ஆலோசனையின்பேரில் தொடர்ந்தும் அவர் மருத்துவ கண்காணிப்பில் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரின் உடல்நலம் சீரான பின்னரே, தமிழ்நாட்டுக்கு சசிகலா அழைத்துச் செல்லப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடகொரியாவின் தூதுவர் தென்கொரியாவில் தஞ்சம்

சியோல், ஜன. 28

குவைத் நாட்டுக்கான வடகொரியாவின் தூதுவராகப் பணியாற்றிய ரியூ ஹியூன் வூ தென்கொரியாவுக்கு தப்பி வந்துள்ளார் என்று தென்கொரியாவின் தேசிய சட்டமன்ற புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

தென்கொரியா, வடகொரியா இடையே பல ஆண்டுகளாக பகைமை நிலவி வந்தது. ஆனால், கடந்த 2018ஆம் ஆண்டு இரு நாட்டு தலைவர்களும் நேரில் சந்தித்து பேசிய பிறகு பகைமை தணிந்து இணக்கமான சூழல் உருவானது. எனினும், இரு நாடுகளுக்கும் இடையே தற்போது மோதல் வலுக்கத் தொடங்கியது.

இதனிடையே, வடகொரியாவை சேர்ந்த அரச எதிர்ப்பாளர்கள் பலர் அயல் நாடான தென்கொரியாவுக்கு தப்பி சென்று அங்கு அடைக்கலம் புகுகின்றனர். பாதுகாப்பு நிறைந்த எல்லையை கடந்து அவர்கள் தென்கொரியாவுக்கு செல்கின்றனர்.

குவைத் நாட்டுக்கான வடகொரியாவின் தூதராக பணியாற்றி வந்த ரியூ ஹியூன் வூ கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தனது மனைவி மற்றும் பிள்ளையுடன் தென் கொரியாவுக்கு தப்பி வந்தார் என்று தென் கொரியாவின் தேசிய சட்டமன்ற புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது. (ஐ)



# தனிமைப்படுத்தல் விதிகளுக்கு ஆதரவு

## நடால் அறிவிப்பு

சிட்னி, ஜன. 28

அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் பங்கொள்ளும் வீரர் களுக்கான கட்டாய தனிமைப்படுத்தல் செயல்பாடுகளுக்கு ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் ஆதரவு வழங்கியுள்ளார்.

2021 ஆம் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பன் மெல்பர்ன் நகரில் பெப்ரவரி 08 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளது.

இதற்காக மெல்பர்னுக்கு சென்றுள்ள அனைத்து வீரர் களும் பணியாளர்களுக்கும் 14 நாள் கட்டாய தனிமைப்படுத்தல் இருக்க வேண்டும். இந் நிலையில் இந்த கட்டாய தனிமைப்படுத்தல் முறையை பல வீரர்கள் விமர்சித்து வந்த நிலையில் அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரை முன்னிட்டு அவுஸ்திரேலிய அரசாங்கம் எடுக்கும் கொவிட் -19 க்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தாம் ஆதரிப்பதாக தெரிவித்துள் ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள நடால், அவுஸ்திரேலியாவுக்கு வரும் அனைத்து வீரர்களும் தங்களுடன் வரும் ஊழியர்களுடன் இரண்டு வார தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.

இது வழக்கத்தைவிட வித்தியாசமான சூழ்நிலை, இது அனைவருக்கும் மிகவும் வருத்த மாக உள்ளது. அவுஸ்திரேலி யாவிற்கு வந்திருந்த 72 வீரர்களுக்கு கொரோனா பரி சோதனை செய்யப்பட்டு தனிமையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தனிமையில் இருக்கும் வீரர்களுக்கு தாம் மிகவும் வருந்துகிறேன் என்று கூறியுள்ளார். (ஐ)

# சிறந்த வீரருக்கான விருது மாதந்தம் வழங்க முடிவு

ICC

டுபாய், ஜன. 28

சிறந்த வீரருக்கான விருதை மாதந்தோறும் வழங்க சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) முடிவு செய்துள் ளது.

ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் ஆட்டங்களில் சிறப்பாகச் செயல்படும் வீரர்களை மாதந்தோறும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது ஐ.சி.சி.

இணையத்தில் நடத்தப்படும் வாக்கெடுப்பின் வழியாக சிறந்த வீரர், வீராங்கனைகளை ரசிகர்களும் தேர்வு செய்யலாம். முன்னாள் வீரர்கள், தொலைக் காட்சி ஒளிபரப்பை சேர்ந்தவர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் ரசிகர்களுடன் இணைந்து சிறந்த கிரிக்கெட் வீரர், வீரர்களை மாதந்தோறும் தேர்வு செய்வார்கள் என்றும் ஐ.சி.சி. ஓர் அறிக்கையில் கூறியுள்ளது.

முதல் விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் இந்திய வீரர்களான அஸ்வின், ரிஷப் பந்த், முகமது சிராஜ், வாஷிங்டன் சுந்தர், டி. நடராஜன் ஆகியோர் இடம்பெற் றுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# 4 மாதத்தில் 4 நாடுகளுக்கு எதிராக ஆடும் இங்கிலாந்து

லண்டன், ஜன. 28

நடப்பு ஆண்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நியூஸி லாந்து என நான்கு நாடுகளுக்கு எதிராக இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது.



ஜூன் முதல் செப்ரெம்பர் வரை இந்த நான்கு தொடர் களும் இங்கி லாந்திலேயே இடம்பெறவுள்ளன.

ஜூன் மாதம் இங்கிலாந்து செல்லும் நியூஸிலாந்து அணி இரு போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. முதல் போட்டி ஜூன் 2 தொடக்கம் 6 வரை லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள் ளது. இரண்டாவது போட்டி, 10 தொடக்கம் 14 வரை எட்ச்பாஸ்டனில் நடக்கும்.

இதேகாலப் பகுதியில் இங்கி லாந்து செல்லும் இலங்கை அணி, 3 இருபது - 20 போட்டி கள், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொட ரில் ஜூன் 23 தொடக்கம் ஜூலை 4 வரை இங்கிலாந்து அணி விளை யாடவுள்ளது.

ஜூலை மாதம் இங்கிலாந்து செல்லும் பாகிஸ்தான் அணியும் தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடரில் விளை யாடவுள்ளது.

இதற்கடுத்து ஒகஸ்ட் மாதம் இங்கிலாந்து செல்லும் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளை யாடும் இந்தத் தொடர் ஒகஸ்ட் 4 ஆரம்ப மாகி செப்ரெம்பர் 14ஆம் திகதி நிறைவடையும்.



# கங்குலி மீண்டும் மருத்துவமனையில்

கொல்கத்தா, ஜன. 28

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலை வரும் இந்திய அணியின் முன்னாள் தலைவருமான சௌரவ் கங்குலி மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி நெஞ்சுவலி காரமணாக கொல்கத்தா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட் டார். அவருக்கு இதயத்தில் 3 தமனிகளில் அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அவர் மருத்துவ கண்காணிப்பில் இருந்த அவர் 5 நாட்களின் பின்னர் வீடு திரும்பியிருந் தார். இந்நிலையில் நேற்றும் நெஞ்சுவலியால் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று செய்திகள் வெளியாகின.

எனினும், வழக்கமான பரிசோதனைக்காகவே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று மருத்துவ மனை வட்டாரங்களை மேற்கோள்காட்டி பின்னர் வந்த செய்திகள் உறுதிப்படுத்தின. (ஐ)

# ஐ.பி.எல். ஏலம் சென்னையில் நடக்கும்



சென்னை, ஜன. 28

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் மார்ச் மாதத்திற்குப் பதிலாக செப்ரெம்பர் மாதம் தொடங்கி யது. 2021ஆம் ஆண்டுக்கான தொடர் எதிர்வரும் மார்ச் இறுதியில் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்கள் குறைவாக இருக்கும் நிலையில் வீரர்கள் ஏலம் நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால், வீரர்கள் ஏலம் நடைபெற்றே தீரும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்திருந்தது.

இதன்படி வரும் பெப்ரவரி 18ஆம் திகதி வீரர் களுக்கான ஏலம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டி ருந்தது. ஆனால், எங்கு வைத்து நடைபெறும் என்பது தெரிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சென்னையில் வீரர்கள் ஏலம் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்க டெஸ்ட்: ஆஸி. அணி அறிவிப்பு!

## வேட் நீக்கப்பட்டார்



சிட்னி, ஜன. 28

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக் கான அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில், மத்தியூ வேட் இடம்பெறவில்லை.

அண்மையில், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை சொந்த மண்ணில் 1-2 எனத் தோற்றது அவுஸ்திரேலிய அணி.

ஒரே சமயத்தில் தென்னாபிரிக்காவுக்கும் நியூஸி லாந்துக்கும் அவுஸ்திரேலிய அணி சுற்றுப்பயணம் செய்கின்றது. நியுஸிலாந்தில் 5 இருபது - 20 ஆட்டங்களிலும் தென்னாபிரிக்காவில் 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் விளை யாடுகிறது.

இதற்கான டெஸ்ட் மற்றும் இருபது - 20 அணிகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன. ஆஸி. டெஸ்ட் அணியிலிருந்து மேத்யூ வேட் நீக்கப்பட்டு, இருபது -20 அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக அலெக்ஸ் ஹரி சேர்க்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணி:

ரிம் பெயின் (கப்டன்), பட் கம்மின்ஸ், ஷேன் அபொட், அலெக்ஸ் ஹரி, கேம்ரூன் கிரீன், மார்கஸ் ஹரிஸ், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், ஹென்றிக்ஸ், மார்னஸ் லபுசேன், நதன் லயன், மைக்கல் நசீர், ஜேம்ஸ் பற்றின்சன், வில் புகோவ்ஸ்கி, ஸ்ரீவ் ஸ்மித், மிற்சல் ஸ்ரார்க், மார்க் ஸ்டகெட, மிற்சல் ஸ்வெப்சன், டேவிட் வோர்னர். (ஐ)

# வெளிவிவகார கொள்கையில் இலங்கைக்கு பெரும் பின்னடைவு

## ஹரீன் பெர்னாண்டோ தெரிவிப்பு



கொழும்பு,ஜன.28

**இலங்கை அனுப்பிய தூதுவரை இந்தியா, கனடா இன்னும் ஏற்கவில்லை. இதன்மூலம் வெளிவிவகாரக் கொள்கை விடயத்தில் இரண்டு மடங்கு பின்னடைவை இந்த அரசாங்கம் சந்தித்துள்ளது புலனாகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ரஞ்சன் ராமநாயக்கவை சிறைச்சாலைக்கு இடமாற்றியுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு கறுப்புப்பட்டி அணிந்து ஊடக சந்திப்பை மேற்கொள்கின்றேன். ரஞ்சனை பார்வையிட பாராளுமன்ற உறுப்பினர் திலிப் ஜயவீர சென்றிருந்தார். ஆனால், அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சிறப்புரிமையை சிறைச்சாலை அதிகாரிகளால் தடுக்க முடியாது.

ஜனாதிபதி கோட்டாபயவின் வெளிவிவகார கொள்கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் அனுப்பிய தூதுவரை இந்தியா ஏற்கவில்லை. கனடா அரசாங்கமும் இலங்கை தூதுவரை இன்னும் ஏற்கவில்லை. வெளிவிவகார கொள்கை விடயத்தில் இரண்டு மடங்கு பின்னடைவையே இந்த அரசாங்கம் சந்தித்துள்ளது. 160 பொலிஸாரின் இடமாற்றம் தொடர்பில் நான் பாராளுமன்றத்தில் பேசியிருந்தேன். இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையில் இன்று கருத்துச் சுதந்திரத்துக்கு இடமில்லை. எனக்கு ஏற்படுத்திய தடைக்கு அறிவியல் பூர்வமாக பதிலளித்துள்ளேன்.

கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் தொடர்பில் துறைமுக பணிப்பாளர் சபைக்கு மாற்றுவழி தொடர்பில் அறிவிக்குமாறு கூறப்பட்டது. அவர்களும் இதற்கு சாதகமாகப் பதிலளிக்க வில்லை. அவர்களும் இந்தியாவுக்கு வழங்கும் நிலைப்பாட்டில் தான் உள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் இந்த விடயம் தெளிவாகக் கூறப்பட்டே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. முந்தரா துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இலங்கையின் ஜேசிடி முனையை உபாயமற்றதாக ஆக்குவதுதான் அதானியின் நிலைப்பாடாகும். இதுதான் எங்களுக்கு உரிய பிரச்னை. உபாயமிக்க இந்த முனையம் இல்லாமல் போனால் நாட்டுக்கு வருமானம் இல்லை. இதனால் ஏற்றுமதித் தொழில்துறை மற்றும் அது சார்ந்த வருமானமும் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது.

இலங்கையின் வெளிவிவகார கொள்கை பாரிய பின்னடைவுக்குச் சென்றுள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பவித்ரா உட்பட ஏனைய அமைச்சர்கள் விரைவாக சுகமடையப் பிரார்த்திக்கின்றோம். நாங்கள் ஆரம்பம் முதல் பல விடயங்களை தர்க்க ரீதியாக முன்வைத்தோம். 54 நபர்களைக் கொண்டு எதிர்க்கட்சியால் முடியுமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்தோம். சகலவற்றுக்கும் முகம்கொடுத்தோம். கொரோனா தொடர்பில் பாராளுமன்றத்தில் சஜித் பிரேமதாஸ கூறிய போது அவரைப் பலர் இழிவுபடுத்தினர். பவித்ரா நகைப்புக்கிடமாக பேசினார். எனவே இனியாவது அறிவியல் ரீதியாகப் பதிலளிக்க முயற்சி செய்யுங்கள்.

மக்களின் ஒற்றுமையை இலக்காகக் கொண்டு புதிய கட்சி புதிய பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இன்று பலரும் எமது கட்சியில் இணைந்த வண்ணமுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி ஒற்றுமையின் கட்சி.

வியத்மக வீழ்ச்சி கண்டுவிட்டது. தோற்று விட்டது. புதிய அரசியல் சிந்தனை நாட்டுக்குத் தேவைப்படுகிறது. குடும்பத்தை இலக்காக் கொண்ட கோத்திர குறுகிய அரசியல் கலாசாரம் இல்லாமல் ஆக்கப்பட வேண்டும். இலவச கல்வியில் படித்த நடுத்தர மக்களும் தங்கள் ஆளுமையால் முன்னுக்குவர முடியுமான அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும்.

சிறைச்சாலையில் மரணித்தவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்க. நீதி கிடைக்கும் என்றும் தெரியவில்லை - என்றார். (எ)

# வேலணை பிரதேச செயலாளரின் இடமாற்றம் குறித்து உரிய கவனம்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 28

வேலணை பிரதேச செயலரின் இடமாற்றத்தை இரத்து செய்யுமாறுகோரிப் பிரதேசத்தின் பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவி டம் கோரிக்கை மனு ஒன்றைக் கையளித்துள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு நேற்று சென்ற அந்தப் பிரதேச மக்கள் தமது கோரிக்கை தொடர்பில் அமைச்சருக்கு எடுத்துரைத்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் அப்பிரதேசத்தின் நலன் கருதியும் அந்த இடமாற்றம் தொடர்பில் தாம் உரிய கவனம் செலுத்தி அதற்கான தீர்வை பெற்றுத் தருவதாக மக்களிடம் உறுதிமொழி வழங்கினார்.

வேலணை பிரதேச செயலராக பதவி வகித்த சோதிநாதன் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டு வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டார்.

# புதிய வைரஸ் குறித்து அறிவிக்க சுகாதார துறையினர் மிக தாமதம்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிருப்தி

கொழும்பு,ஜன.28

நாட்டில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸின் புதிய வகை தொடர்பில் மக்களுக்கு அறிவிக்க சுகாதாரப் பிரிவினர் மிகவும் தாமதித்துவிட்டனர்.

புதிய வைரஸ் தொடர்பில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பரிசோதனைக் குழு சில நாள்களுக்கு முன்னர் சுகாதாரப் பிரிவுக்கு அறிவித்திருந்த போதிலும் அவர்கள் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

புதிய வைரஸ் தொடர்பில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பரிசோதனைக் குழுவால் நேற்று முன்தினம் மக்களுக்குத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இந்த வைரஸ் தொடர்பில் முன்பே அறிவிக்கப்பட்டிருந்த போதும் சுகாதாரத் துறையினர் மிகத் தாமதித்துவிட்டனர்.



இவ்வாறு இனங்காணப்பட்ட வைரஸ் வேகமாகப் பரவக்கூடியதாகக் கண்டறிப்பட்டுள்ளதால் அதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ)


# தங்கம்மா முதியோர் இல்லம்

## (புதுக்குளம், கனகராயன் குளம்)

**தங்கம்மா முதியோர் இல்லத்தில் வயோதிபர்கள் இலவசமாக தங்குவதற்கு இட வசதிகள் உண்டு.**

1. நவீன வசதிகள் கொண்ட ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியான மண்டபங்களில் இலவசமாக தங்குவதற்கான இட வசதிகள் உண்டு.
2. சேர விரும்புவோர்
   - i. 60 வயதிற்கு அதிகமானவராக இருத்தல் வேண்டும்.
   - ii. PRC பரிசோதனைப் பத்திரம் கொண்டு வரப்படல் வேண்டும்.
   - iii. வருபவர்கள் தம்மைப் பராமரிக்க யாருமில்லை என கிராம அலுவலகரிடம் கடிதம் பெற்று வரவேண்டும்.
   - iv. கடுமையான நோயாளிகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.
3. இலவச சேவைகள்
   - i. வசதியான படுக்கைகள்
   - ii. இலவசமான உணவு
   - iii. உடை
   - iv. அடிப்படை மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.
4. நவீன வசதிகள் கொண்ட தனியான அறைகள், புதிதாக அமைக்கப்பட்ட தனியான அறைகள் உண்டு. அவ்வாறான அறைகளுக்கு குறைந்த பட்ச வாடகை செலுத்தப்பட வேண்டும். ஆனால் உணவு, உடை, அடிப்படை மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
5. வெளிநாடுகளிலுள்ள பிள்ளைகளின் / உறவினர்களின் தாய், தந்தையர்களுக்கு மிகவும் பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டிலுள்ளவர்களும் இந்த வசதிகளை பயன்படுத்த முடியும்.
6. எதிர்வரும் மாசி மாதம் 15 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு:**
ஸ்தாபகர் Dr. முருகர் குணசிங்கம் - 076 248 2766
முகாமையாளர் தெ.தவராசா - 077 449 9619

# குருந்தூர் மலைக்கு செல்வதற்கு சிவசேனையினருக்கும் கெடுபிடி

## மறவன்புலவு சச்சிதானந்தம் சொன்னது முழுப்பொய் என்றும் அவர்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.28

**முல்லைத்தீவு குருந்தூர் மலைக்கு செல்வதற்கு தடையில்லை, அங்கு சூலம் அகற்றப்படவில்லை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தவறான தகவலை கூறி, இராணுவத்திடம் நல்ல பெயர் வாங்க முயன்ற உத்தி பலிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.**

சிவசேனை உள்ளிட்ட சைவ சமய அமைப்புக்கள் நேற்று குருந்தூர் மலைக்கு சென்றபோது, அவர்களை நீண்டநேரம் இராணுவத்தினர் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்று வடக்கிலுள்ள சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுமார் 25 பேர் குருந்தூர் மலைக்கு சென்றனர்.

அங்கு நின்றிருந்த இராணுவத்தினர், அவர்களை மலைக்கு செல்ல அனுமதிக்க முடியாது என தடைவிதித்தனர். சுமார் இரண்டரை மணித்தியாலத்திற்கும் மேலாக, மலையடிவாரத்தில் அந்த குழு காக்க வைக்கப்பட்டிருந்தது. பல தரப்பினரையும் தொடர்பு கொண்டு பேசிய பின்னர், மலைக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் சிவசேனை அமைப்பினரா? என இராணுவத்தினர் விசாரணை செய்தனர். அங்கு சென்றவர்கள் அதை மறுத்து, சிவசேனையினர் வரவில்லையென்றனர். ஊடகவியலாளர்கள் யாராவது இருக்கிறார்களா என்றும் இராணுவத்தினர் விசாரணை நடத்தினர்.



பூக்கள், வழிபாட்டு பொருட்கள் எதுவும் கொண்டு செல்ல முடியாதென தடை விதிக்கப்பட்டது. அங்கு பூசை செய்யவும் அனுமதிக்க முடியாதென்றார்கள். புகைப்படம் எடுக்கவும் அனுமதிக்கப்படவில்லை.

அனைவரது பெயர், அடையாள அட்டை இலக்கங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டனர்.

புலனாய்வாளர்களே அவர்களை ஆலயத்திற்கு அழைத்து சென்றனர். பெரும் கெடுபிடியின் மத்தி யில் ஆதிசிவன் ஐயனார் ஆலய பகுதிக்கு அழைத்து செல்லப்பட்ட போது, அங்கு சூலம் அகற்றப்பட்டமையையும் கண்ணுற்றுனர். (ஐ)

# இப்படியும் நடக்கிறது!

அரசாங்க திணைக்களம் ஒன்றில் தமது நிறுவனத்தை பதிவுசெய்வதற்கு முயன்ற ஒருவரிடம் அந்த திணைக்களம் ஒரு விண்ணப்பப் பத்திரத்தை கொடுக்கின்றது.

அந்த விண்ணப்பப் படிவத்தை நிரப்பி அவர் மீண்டும் அந்தத் திணைக்களத்திற்கு கொடுக்கவேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில் இவர் கையொப்பம் இடுவதை ஓர் உயர் பதவியிலுள்ளவர் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பப்படிவத்திலேயே யார் அந்த அதிகாரி என்பதும் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றது.

தனது கையெழுத்தை உறுதிப்படுத்துவதற்காக அந்த உயர் அதிகாரியிடம் ஒரு நேரத்தை பெறுவதற்கு இவர் முயன்றார்.

அது ஒரு நீதித்துறை சார்ந்த அலுவலகம்.

யாழ்ப்பாணத்திலுள்ள அந்த அலுவலகத்தில் நிர்வாக அதிகாரி தரத்தில் உள்ளவர் அவர்.

அவரை அணுகி அந்த படிவத்தைக்காட்டி, தான் கையொப்பம் இடுவதை அந்த அலுவலகத்தில் உள்ள அந்த அதிகாரி உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்க, அந்த நிர்வாக அதிகாரி கேட்ட கேள்வி தூக்கிவாரிப்போட்டது.

'இப்படி, அவர் தான் உறுதிப்படுத்தவேண்டும் என்பது தொடர்பாக வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலை கொண்டு வாருங்கள். அதன் பின்னர்தான் நான் அந்த அதிகாரியிடம் நேரம் பெற்றுத்தரலாம்.'

அரச திணைக்களம் ஒன்றினால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் தெளிவாக இருந்தபோதும், அவருக்கு வர்த்தமானி அறிவித்தல் வேண்டுமாம்!

யாழ்ப்பாணத்தின் நிர்வாகம் இப்படிப்பட்டவர்கள் கைகளில்தான்...!

**- ஊர்க்குருவி**

# மட்டக்களப்பில் மாணவனுக்கு கொரோனா தொற்று உறுதி!

## சக மாணவர்களுக்கு தனிமை

மட்டக்களப்பு, ஜன. 28

மட்டக்களப்பு நகரில் பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் 10ஆம் ஆண்டு மாணவன் ஒருவருக்கு, நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக, மட்டக்களப்பு பொது சுகாதார பரிசோதர் எஜ்.ராஜ்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரில் பாடசாலை மாணவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இதனையடுத்து, மேற்படி மாணவன் கல்வி பயின்ற வகுப்பில் அனைத்து மாணவர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். அத்துடன், மாணவனுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்த மேலும், 8 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 573ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 160 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.




# உடல் அடக்கத்துக்கு அனுமதி கோரி கொழும்பில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.28

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் எனக்கோரி முஸ்லிம் இடதுசாரி முன்னணி உறுப்பினர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை தூதரகம் முன்பு இடம்பெற்றது.இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனு ஒன்றை தூதரகத்தில் கையளித்தனர். (எ)

# முதியோர் இல்லத்தில் 14 பேருக்கு தொற்று!

கொழும்பு, ஜன. 28

மாத்தறை மாவட்டம் - பிட்டபெத்தர பகுதியிலுள்ள முதியோர் பராமரிப்பு இல்லம் ஒன்றில் குறைந்தது 14 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகினர் தென் மாகாண சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமூக சேவைகள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் இந்த முதியோர் இல்லத்தில் இருக்கும் 12 முதியவர்கள் மற்றும் இரண்டு பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் ஒரு முதியோர் இல்லத்தில் வசிக்கும் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவது இதுவே முதன்முறையாகும்.

இந்த முதியோர் இல்லத்தில் இருந்த 20 பேருக்கும் பி.சி.ஆர். சோதனை செய்யப்பட்டது. இதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியானதாக சுகதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட முதியவர்களில் ஏழு பேர் 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதில் உள்ளவர்கள் என தெரியவருகிறது. (ஐ)

# எமது நிலம் எமக்கே சொந்தம்: காணிகள் சுவீகரிப்பை ஏற்கோம்

## டக்ளஸூம் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 28

எமது நிலம் எமக்கே சொந்தம். வடக்கில் அரச, தனியார் காணிகளை சுவீகரிப்பதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. தரிசு நிலங்களை மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்", என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமையகமாக அவர் மாற்றி வைத்துள்ள ஸ்ரீதர் தியேட்டரில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், எமது கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிவரும் இந்திய மீனவர்கள் தமது கடற்பரப்பிலள்ள வளங்களை முற்றாக அழித்தொழித்த பின்னர், எமது கடற்பரப்பிற்கள் உள்நுழைந்து சட்டவிரோதமானதும் அத்துமீறியதும் தடை செய்யப்பட்டதுமான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரமும் நாளாந்தம் பெரும் பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது. இதனால், அவர்களது குறித்த தொழில் நடவடிக்கைகளை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனடிப்படையில் எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் பாதுகாத்து முன்னேற்றம் காணச்செய்யும் நடவடிக்கைகளை எவ்விதமான இடர்பாடுகளையும் சவால்களையும் எதிர்கொண்டு ஒரு பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் தீர்வுகளை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றேன்

இதனிடையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் எனக்கு இந்த பெரும் பொறுப்பு மிக்க அமைச்சை தந்ததன் நோக்கம் வடக்கிற்கும் தெற்கிற்குமான இன நல்லிணக்கத்தை வளர்த்தெடுக்கும் மேலும் வலுப்படுத்தும் நோக்கத்திலேயே வழங்கப்பட்டது.

வடக்கில் அரச மற்றம் தனியார் காணிகள் சுவீகரிப்பதை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக எமது நிலம் எமக்கே சொந்தம் என்பதே எனது நிலைப்பாடு. அதற்கிணங்க இங்குள்ள காணிகள் அனைத்தும் எமது பகுதி மக்களுக்கே உரியது.

அதிலும் குறிப்பாக பாவனையில்லாது இருக்கும் காணிகளை பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் குறிப்பாக குறித்த காணிகளை காணிகளில்லாது இருக்கும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் தரிசு நிலங்களை பயிர்செய் நிலங்களாக மாற்றுவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழர் வழிபாட்டு அடையாளங்களை குருந்தூர் மலையில் காணவில்லை!

## ரவிகரன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜன. 28

**முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன என்று வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் அப்பகுதி கிராம மக்களின் சார்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.**

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் மீண்டும் அவ்விடத்தில் நிறுவ வேண்டும் எனவும், தொடர்ந்தும் தமிழ் மக்கள் குருந்தூர் மலைக்குச் சென்று தமது வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனவும் ரவிகரன் குறித்த முறைப்பாட்டின் ஊடாகக் கோரியுள்ளார்.

மேலும், குறித்த முறைப்பாடு அளித்தமை தொடர்பில் ரவிகரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலைப் பகுதிக்கு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க படையினர் சகிதம் வருகைதந்து அங்கு தொல்லியல் அகழ்வுக்கான பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிலையில் அங்கிருந்த சூலம் உள்ளிட்ட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன. ஊடகங்கள் மூலமாகவும், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அங்குள்ள மக்கள் மூலமாக எனக்கு தகவல் தரப்பட்டது.

அதேவேளை, குருந்தூர் மலைக்கு வழிபாட்டுக்குச் செல்லும் தமிழ் மக்களும் அங்கு செல்லவிடாமல் தடுக்கப்படுகின்றனர் எனவும் என்னிடம் கோவில் நிவாகத்தினர் முறையிட்டிருந்தனர்.

இந் நிலையில், மக்களின் இந்த முறைப்பாடுகளுக்கமைய குருந்தூர் மலை ஆதிசிவன், ஐயனார் கோவிலுக்கு இன்று (நேற்று) பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் சிறீதரன், நானும், சில பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்களோடும் சென்றிருந்தோம்.

அப்போது மக்களால் முறையிடப்பட்டதைப் போலவே, அங்கு சென்ற எங்களையே அங்கிருந்த இராணுவத்தினர் மலைப் பகுதிக்குச் செல்லவிடாது தடுத்திருந்தனர். எனினும், நாம் அங்கு சென்று நிலைமையை பார்வையிட்டோம். அங்கு எமது வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமையை கண்டோம்.



இந்நிலையில் இவ்வாறு தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலே, இன்று (நேற்று) முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் அப்பகுதிக் கிராமமக்களின் சார்பாக முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளேன்.

மேலும், குறித்த முறைப்பாட்டிலே, காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் வழிபாட்டுச் சின்னங்கள் மீள நிறுவப்பட வேண்டும் எனவும், அங்கு தமிழ் மக்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொடர்ந்து அனுமதிக்கவேண்டும் எனவும் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளேன் - என்றார். (ஐ)



# மன்னார் பேருந்து நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள்

மன்னார், ஜன. 28

மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் மன்னார் பேருந்து தரிப்பிட பகுதியில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் மற்றும் பொலிஸார் ஆகியோருக்கு குறித்த பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மேலும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளாத மன்னார் பேருந்து தரிப்பிட பகுதியில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளின் சாரதிகளை இன்று முதல் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட மாட்டாது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இந்த மாதத்தில் மட்டும் 142 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் மொத்தமாக 159 தொற்றாளர்கள் இது வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இரு மரணங்களும் நேர்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15892 \|வே\|1975 Seperated\|கொழும்பு-06\| இந்து It Engineer\|Sri lanka\| செவ் : 02 \|மகம்(சிம்மம்)\|177செ.மீ | 16042\| செ\|1977 Divorced\|கண்டி\| இந்து Nurse\| Sri lanka\| சூ.செவ் : 02 பூராடம்(தனுசு) \| 168செ.மீ |
| 15883\|மு \|1976 Divorced\| மஸ்கெலியா\| இந்து Coordinator \| Qatar\| பூசம்கடகம்)\|171செ.மீ | 16117\| வே \|1978 பருத்தித்துறை\|இந்து \|Sri Lanka\| பூரம்(சிம்மம்)\|161செ.மீ |
| 16000\| வே\|1979 வல்வெட்டித்துறை\| இந்து\|Uk\| Business\|பூசம்(கடகம்) \|170செ.மீ | 16135\| வே \|1979 நல்லூர்\| இந்து \|செவ் : 02 Computer Typist\| Sri lanka\| கார்த்திகை(மேடம்) \|158செ.மீ |
| 15934 \|வே \|1980 யாழ்நகரம்\| இந்து \|செவ் : 12 Mechanical\|Sri lanka\| சதயம்(கும்பம்)\|171செ.மீ | 15877\| வே\|1981 ஏளாலை\|Sri Lanka\|சூ.செவ் : 09 Insurance Agent \| இந்து மகம் (சிம்மம்)\| 168செ.மீ |
| 15757\| வே \|1981 யாழ்நகரம்\| இந்து \| செவ் : 04 Mechanical\| UK கேட்டை(விருச்சிகம்)\| 158செ.மீ | 16033\| வே \|1981 சாவகச்சேரி\| இந்து \| செவ் : 07 Grama Sevaka\|Sri lanka\| பூசம்(கடகம்) \|155செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# யாழ். வந்து சென்ற திருமலைவாசிக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நபர் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பியபோது தென்மராட்சிப் பகுதியில் வீதியில் மறித்து அவரிடம் இருந்து பி.சி.ஆர். மாதிரி பெறப்பட்டது.

குறித்த நபர், யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும் சில வீடுகளுக்கு சென்று திரும்பினார் என்றும், இந்த விடயம் குறித்து திருகோணமலையில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்கியிருப்பதாகவும் குறித்த நபர் வந்து சென்ற வீடுகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வருகின்றனர் என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

# காட்டு யானைகளின் தாக்குதலில் மட்டக்களப்பில் இருவர் பலி!

மட்டக்களப்பு, ஜன. 28

மட்டக்களப்பில் காட்டு யானைகள் இரு வேறு இடங்களில் தாக்கிய சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மியான்கல் வயல்பகுதியில் காட்டுயானை தாக்கியதில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 64 வயதுடைய ஒருவர் பலியானார்.

இதேவேளை, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஈரலகுளம் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் மரணித்தார் என்று கரனடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பழைய சந்தை வீதி, சித்தாண்டி 4 கிராமத்தை சேர்ந்த 34 வயதான ஒருவரே மரணித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. தமது வயல் காணியில் வைத்து அவர் நேற்று காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கானார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## பாடசாலைகள் ஆரம்பமான பின்னர்

# காலியில் 43 மாணவர்கள் கொரோனாவுக்கு இலக்கு!

காலி, ஜன. 28

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் காலி மாவட்டத்தில் இதுவரை 43 மாணவர்கள் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

2021 கல்வி ஆண்டின் முதலாம் தவணைக்காக கடந்த இந்த மாதம் பாடாசலைகள் ஆரம்பமாகின. இதன் பின்னர் நேற்று வரையான காலப்பகுதியிலேயே 43 மாணவர்கள் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்கள், அந்த மாவட்டத்தில் 23 பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் என்று காலி மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 13ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை குறித்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களில் 38 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்



*6.31 மணி* : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
*6.35 மணி* : மதம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்



*7.05 மணி* : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
*7.15 மணி* : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
*7.20 மணி* : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகளில்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை - நேரலை
*10.30 மணி* : தொடர் நாடகம்
*11.00 மணி* : பாரதீ
*12.00 மணி* : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
*1.00 மணி* : நலம்தானா
*1.30 மணி* : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
*4.30 மணி* : குட்டீஸ் தர்பார் - நேரலை



*5.30 மணி* : குறுந்திரை நேரம்
*6.00 மணி* : வெள்ளித்திரை

**இரவு**
*7.00 மணி* : சமையல் சமையல்
*7.30 மணி* : பல்துறைக் கருவூலம்
*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*9.00 மணி* : மாதம் ஒரு இசைக்குழு -
புத்தம் புதிய நிகழ்ச்சி



*10.00 மணி* : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
*1.00 மணி* : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில்
கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**
*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை

**இரவு**
*7.00 மணி* : ஓய்வெடு நிலவே
*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**
*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்

**இரவு**
*7.00 மணி* : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

## ஓம் ரிவி

**காலை**
*5.00 மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*07.00 மணி* : இன்றைய சிந்தனை
*07.05 மணி* : இன்றைய நாள்
*07.20 மணி* : சின்மய சிந்தனை
*07.30 மணி* : மங்கள இசை
*08.00 மணி* : அருளுரை
*08.30 மணி* : திருவாசகம்
*09.00 மணி* : யாழ்ப்பாணம் ஏழாலை வசந்தபுரம்
வசந்தநாக பூஷனி அம்மன் தேர்த்திருவிழா
*10.00 மணி* : ஐயப்பன் பாடல்கள்
*10.30 மணி* : பஜனை
*11.00 மணி* : பக்திமலர்
*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : யாழ்ப்பாணம் கோண்டாவில்
வல்லிபுரநாதர் கோவில் திருவிழா
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்
*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை
*08.00 மணி* : யாழ்ப்பாணம் ஏழாலை வசந்தபுரம்
வசந்தநாக பூஷனி அம்மன் தீர்த்தத்திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
*7.00 மணி* : ஆலயப் பாடல்கள்
*9.00 மணி* : ஜெபமாலை
*10.00 மணி* : திருப்பலிப்பாடல்கள்
*10.30 மணி* : புனித சூசையப்பர் மன்றாட்டு
*11.30 மணி* : ஜெபமாலை

**பகல்**
*12.00 மணி* : திருகோணமலைத்திருப்பலி
*1.00 மணி* : மட்டக்களப்பு திருப்பலி
*2.00 மணி* : நற்சிந்தனை
*3.00 மணி* : பாடல்
*4.00 மணி* : திருப்பலிப்பாடல்கள்
*4.30 மணி* : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஜ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு
*8.30 மணி* : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.